# விடுதலைப்புலிகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான ஏடு | குரல் 6 | ஏப்ரல் - 85 | அன்பளிப்பு ரூ 2

# புரட்சிகர தலைமையை உருவாக்குவோம்

## விடுதலைப் போராளி -களுக்கு பிரபாகரன் வேண்டுகோள்

**"நாம் விரும்புவது உண்மையான நிரந்தரமான ஒருமைப்பாட்டையே. இந்த ஒற்றுமையானது புரட்சிகர பாட்டாளி வர்க்கத் தலைமையை கட்டி எழுப்பும் இலக்கைக் கொண்டதாக இருக்கவேண்டும்." இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் விடுதலைப் போராளிகளுக்கு அறைகூவல் விடுத்துள்ளார். திரு. பிரபாகரனின் அறிக்கையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது. அவரது முழுமையான அறிக்கை ஒலிப்பதிவு நாடாவாக மக்கள் மத்தியில் விநியோகமாகி வருகிறது**

தனித்து நின்று போராடி தமிழீழம் காணவேண்டும் என்ற இறுமாப்போடு நாம் இயங்கவில்லை. ஆயுதப் போராட்ட பாதையை வரித்துக்கொண்ட சகல விடுதலை அமைப்புகளும் எமது பொது எதிரியை எதிர்கொண்டு போராட வேண்டும் என்பதே எமது ஆவல். ஒன்றுபட்டுப் போராடுவது எமது பலத்தைப் பன்மடங்குபெருக்கும். ஆகவே, நாம் ஒற்றுமையை வரவேற்கவே செய்கிறோம். ஒற்றுமையின் தேவையை உணர்கிறோம். ஆனால் இந்த ஒற்றுமையானது தமிழ் ஈழப் புரட்சி இயக்கத்திற்கு அப்பாற்பட்ட அந்நிய சக்திகளின் அழுத்தங்கள் காரணமாகவோ, அன்றி பிற்போக்கு சந்தர்ப்பவாத அரசியல் சக்திகளின் நெருக்குதல் காரணமாகவோ, அவசரப்பட்டுச் சமைத்த சாம்பார் ஒற்றுமையாக அமைவதை நாம் விரும்பவில்லை. அப்படியான தளர்ந்த, உறுதியற்ற, சந்தர்ப்பவாத இணைப்பு நிரந்தரமான ஒற்றுமையை, உண்மையான ஒற்றுமையை உருப்படியான ஒற்றுமையை உருவாக்கப்போவதில்லை என்பது எமது கருத்து. இப்படிச் சொல்வதால் நாம் ஒற்றுமையை விரும்பவில்லை என்று எவரும் தவறுகக் கருதிவிடக்கூடாது.


நாம் விரும்புவது உண்மையான, நிரந்தர ஒருமைப்பாட்டையே. இந்த ஒற்றுமையானது புரட்சிகரத் தலைமையை கட்டியெழுப்பும் இலக்கில், வரலாற்று போக்கினை உணர்ந்து கொண்ட தெளிவில், புரட்சிகர இலட்சியங்களிலிருந்து வழுவாத உறுதிப்பாட்டில், ஆழமான சகோதரத்துவப் புரிந்துணர்வில், புரட்சிகர சக்திகள் மத்தியில் ஏற்படவேண்டிய ஒன்றாகும். இந்த ஒற்றுமையானது எந்த வொரு கட்டாயத்தின் பேரிலேயோ, அழுத்தத்தின் பேரிலேயோ பலவந்தமாக திணிக்கப்படுவதல்ல.

நாம் இன்று வரலாற்றின் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் நிற்கிறோம். தமிழீழத்தில் கோரத்தாண்டவமாடிவரும் அரச பயங்கரவாத அட்டூழியங்களால் எமது மக்கள் மிகவும் இக்கட்டான ஆபத்தான நிலையை எதிர்நோக்கியுள்ளனர். எமது மக்கள் சிங்கள இனவாத அரக்கர்களால் கொன்று குவிக்கப்படும் பொழுது மூழு உலகமுமே கவலை கொள்ளலாம், கண்டனங்கள் தெரிவிக்கலாம், கண்ணீர் வடிக்கலாம். ஆயினும் எமது மக்களைப் பாதுகாத்து, அவர்களது சுதந்திரத்தை வென்றெடுக்கும் மாபெரும் பொறுப்பு விடுதலைப் போராளிகளாகிய எம்முடையது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த மாபெரும் வரலாற்றைச் சுமந்து கொண்டிருக்கும் நாம், எம்மத்தியிலுள்ள வேற்றுமைகள், வெறுப்புகளைக் களைந்து எமது மக்களின் விடிவுக்காக ஒன்றிணைந்து போராடும் காலம் அண்மித்துவிட்டது என்றே கருதுகிறேன். இந்த நெருக்கடியான காலகட்டத்தில் இதனையே எமது மக்களும் எதிர்பார்க்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாததல்ல.

ஒற்றுமைக்கு முதற்படியாக, ஒற்றுமைக்கான நல்லெண்ண சூழ்நிலையை நாம் உருவாக்கிக் கொள்வது அவசியம். **இதற்கு வழியாக நாம்** ஒருவரை ஒருவர் விசமத்தனமாக தாக்கி விமர்சிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். துர்அதிஷ்டவசமாக எம்மத்தியில் வேரூன்றிய வேறுபாடுகள், வெறுப்புணர்வுகளை களைந்துவிட வேண்டும். சொல்லளவில் ஒற்றுமை வேதாந்தம் பேசிக் கொண்டு, செயலில் சகோதரத்துவ யுத்தம் நடத்தும் விடுதலை அமைப்புகளும் இருக்கத்தான் செய்கின்றன. இந்த சகோதர விரோத செயற்பாடுகள் நிறுத்தப்படாமல் ஒற்றுமைக்கான நல்லெண்ண சூழ்நிலையை எப்படி உருவாக்குவது? ஒற்றுமை என்ற உயரிய நோக்கினை மக்களை ஏமாற்றும் **வெறும் பிரச்சார சாதனமாகக் கையாள்வது மிகவும் கீழ்த்தரமான அரசியற் சந்தர்ப்ப வாதமாகும்.**

ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில் சகல புரட்சிகர விடுதலை அமைப்புகளுக்கும் நான் விடுக்கும் வேண்டுகோள் இதுதான். போர்க் களத்தில் குதியுங்கள். எமது பொது எதிரியை ஒன்றிணைந்து எதிர்ப்போம். களத்தில் எதிரியை சந்திக்கும்போது எம்மத்தியில் பரஸ்பர ஒத்துழைப்பும், நல்லெண்ணமும் பிறக்கும் என்பது திண்ணம். அதே சமயம் உண்மையான ஒருமைப்பாட்டிற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளையும் மேற்கொள்வோம். நாம் தோளோடு தோள் நின்று போராடும்பொழுது எமது மக்களும் எம்மோடு அணிதிரள்வார்கள். முழுத் தேசமுமே எமக்கு பக்கபலமாக நிற்கும். எமது ஒன்றுதிரண்ட பலத்தைக்கண்டு எதிரி நடுக்கம் கொள்வான். நாம் களத்தில் ஒன்றிணைந்து போராடினல் எதிரியை எமது தாய்நாட்டிலிருந்து விரட்டியடித்து சுதந்திர தமிழீழம் காண்பது வெகுதூரத்தில் இராது.

எமது பழைய, பாராளுமன்றத் தலைமை, எதிரியைப் புரிந்து கொள்ளும் ஆற்றலும் அரசியல் ஞானமும் அற்றதாக இருந்ததுதான் எமக்கு இந்த துர்க்கதி ஏற்பட்டது. சப்பாணி கட்டி மண்டியிட்டிருந்து, சலுகைகளுக்காகத் தவம் இருந்து, நம்பி நம்பி ஏமாந்து, ஒரு பரம்பரை



**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.eelamview.com

Liberation Tigers Of TAMIL EELAM

# புலிகளின் குரல்

## இந்திய அரசும் ஈழத் தமிழர் பிரச்சினையும்

ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாடு எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் அடித்துக் கூறத் தேவையில்லை. இந்தியா தென் ஆசியக் கண்டத்தின் பலம் பொருந்திய வல்லரசு. இந்தியாவின் பூகோள - அரசியல் - கேந்திர வியூகத்திற்குள் எமது தாய்ப் பூமி அமையப்பெற்றிருக்கிறது. இந்திய தேசிய நலனும், தேசிய பாதுகாப்பும், இந்துமா சமுத்திரக் கேந்திரப் பந்தோபஸ்தும், எமது தேசியப் போராட்டத்தோடு பின்னிப் பிணைந்து இருக்கிறது. ஆகவே, எமது பிரச்சினையில் இந்தியா பேரார்வம் காட்டுவது தவிர்க்க முடியாததே.

ஆனால், தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினை எத்தன்மை வாய்ந்தது? இதன் தனித்துவமான, விசேச குணாம்சங்கள் என்ன? இப்பிரச்சினைக்கு இறுதியான அரசியல் தீர்வுதான் என்ன? என்ற அடிப்படையான கேள்விகளைப் பொறுத்தவரை இந்திய அரசியல் வட்டாரங்களிலும் சரி, சர்வதேச அரசியல் அரங்கிலும் சரி, ஒரு தெளிவான கண்ணோட்டமும், சரியான அணுகுமுறையும், இருப்பதாகத் தெரியவில்லை. இது மிகவும் துரதிஷ்டமானது என்றே சொல்லவேண்டும். இந்த தெளிவற்ற நிலைமை தொடர்ந்து இருக்கும்வரை எமது பிரச்சினைக்கு ஒரு திட்டவட்டமான, நிரந்தரமான அரசியற் தீர்வு ஏற்படுமா என்பது சந்தேகமே. ஏனெனில், இந்தியாவினதும் உலக நாடுகளினதும் ஏகோபித்த நல்லாதரவின்றி நாம் எமது அரசியல் இலட்சியத்தை அடைவது சிரமமான காரியமே. இந்த நிலைமைக்கு நாம் இந்தியாவைக் குறை கூற முடியாது. எமது பிரச்சினை என்ன, அதற்கு எத்தகைய தீர்வை நாம் எதிர்பார்க்கிறோம். என்பதில் தமிழ் விடுதலை இயக்கத்தால் ஒருமைப்பாடான, ஏகோபித்த கருத்து முன்வைக்கப்படாதது இந்தக் குழப்பத்திற்கு காரணமாகும். இதன் காரண கர்த்தாக்கள் எமது பழைய பாராளுமன்ற அரசியல்வாதிகள் என்றுதான் சொல்லவேண்டும்.

எமது மக்களது தேசியப் பிரச்சினையின் முழு வடிவத்தினையும் அதற்கான நிரந்தரத் தீர்வு என்ன என்பதையும் கூட்டணித் தலைமை இந்திய அரசிடமோ சிங்கள அரசிடமோ உலகத்திற்கோ தெட்டத்தெளிவாக எடுத்துரைக்கவில்லை. தனியரசு தவிர்ந்த சலுகைகள் பெறுவதற்காகவே இவர்கள் கொழும்புக்கும் டெல்லிக்கும் ராஜதந்திரக் காவடி எடுத்து வந்தனர். ஒரு தேசிய இன மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் ஒரு தலைமை, அம்மக்களின் அடிப்படைப் பிரச்சினையிலும் அதற்கான அரசியற் தீர்விலும் குழம்பி நின்று, 'மற்றவர்கள் பிரச்சினையை தீர்த்து வைக்கட்டும்' என்ற மதிநுட்பமற்ற தந்திரோபாயத்தை கடைப்பிடித்து வந்ததாலேயே இந்தச் சிக்கல் ஏற்பட்டது.

இன அழிவின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட ஒரு தேசிய இனம் என்ற ரீதியில், எமது மக்கள், தமது தேசிய சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டி, தமது தனிநாட்டிற்கு இறைமையை வேண்டினர். இந்தத் தேசிய உரிமைப் போராட்டத்திற்கு மக்களிடமிருந்து மனுப் பெற்ற கூட்டணி அரசியல்வாதிகள், இந்திய அரசியல் அரங்கில் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினைபற்றி பேச்சே எடுக்கவில்லை. இதனால் இந்திய அரசு எமது பிரச்சினையை வேறு கோணத்தில் அணுகியது. இதற்கு கூட்டணித் தலைமையே காரணகர்த்தாக்களாவர். ஈழத் தமிழினத்திற்கு இவர்கள் இழைத்த மாபெரும் வரலாற்றுத் தவறு இதுவாகும்.

கூட்டணி விட்ட தவறை இன்றைய தமிழீழப் புரட்சிகர விடுதலை அமைப்புகள் இழைத்துவிடக்கூடாது. நாம் எமது அரசியல் இலட்சியத்தில் உறுதியான, தெளிவான, தீவிரமான நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பது அத்தியாவசியமானதாகும். நாம் எமது மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தேசிய விடுதலைக்காகப் போராடி வருகிறோம். தேசிய சுயநிர்ணய உரிமை என்பது தனியரசை நிறுவும் உரிமையாகும். தமிழீழத் தனியரசே எமது போராட்ட இலட்சியம்- இந்த இலட்சியத்திற்காக எத்தனையோ இளம் போராளிகள் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். ஆயிரமாயிரம் அப்பாவி மக்கள் செத்து மடிந்தனர். இரத்தமும் வியர்வையும் சிந்தும் இந்த இலட்சியப் பயணத்திலிருந்து எந்தவொரு சக்தியும் எம்மைத் தடுத்து நிறுத்த முடியாது.

சில வட்டாரங்களில் எமது விடுதலைப் போராட்டம் பிரிவினைவாதமென தப்பாக எடை போடப்படுகிறது. நாம் பிரிவினைவாதிகள் அல்லர். நாம் பிரிவினைக்காகப் போராடவும் இல்லை. நாம் எமது பிறப்புரிமைக்காக, எமது தேசிய உரிமைக்காக, எமது அரசியல் தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமைக்காகப் போராடுகிறோம். எமது போராட்டம் நியாயமானது. இனப் படுகொலை புரிந்துவரும் ஒரு அரசுடன் சமாதான சகவாழ்வு சாத்தியப்படாது. ஆகவே நாம் தனியரசு கோரிப் போராடுவதில் தவறொன்றுமில்லை.

எமது மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை; இந்திய அரசு அங்கீகரிக்கவேண்டும். இந்திய அரசியல் இயக்கங்கள் அங்கீகரிக்கவேண்டும். தமிழீழத் தனியரசே ஈழத் தமிழர் பிரச்சினைக்கு இறுதியான தீர்வு. நிரந்தரமான தீர்வு என்பதனை இந்திய அரசியல் உலகம் அங்கீகரிக்கச் செய்வதே இன்றைய தமிழீழப் புரட்சிகர விடுதலை அணிகளின் பிரதான நோக்காக இருக்கவேண்டும். இக் கோரிக்கைக்கு ஈழத் தமிழர் விடுதலை இயக்கம் ஏகோபித்த குரல் கொடுக்கவேண்டும்.

எமது போராட்டம் பாலஸ்தீன மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒத்தது; நமீபிய மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒத்தது. பாலஸ்தீன மக்களதும், நமீபிய மக்களதும் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்துள்ள இந்திய அரசு எமது மக்களின் சுயநிர்ணய [illegible] பிரச்சினைக்கு இறுதியான அரசியல் தீர்வு இந்த அங்கீகாரத்தில்தான் தங்கியிருக்கிறது.

முதல் பக்கத் தொடர்ச்சி

யின் காலத்தை இவர்கள் வீணடித்தனர். இவர்களது விவேகமற்ற அரசியல் போக்கால் எமது விடுதலைப் போராட்டம் பல்லாண்டு காலம் பின் தள்ளப்பட்டது.

கடந்த முப்பது ஆண்டு காலத்திற்கு மேலாக படிப்படியாக தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட ஒடுக்குமுறையானது இன ஒழிப்பை இலக்காகக் கொண்டு ஒரு நாசகாரத் திட்டம் என்பதை தமிழ்ப் பாராளுமன்ற அரசியல்வாதிகள் தீர்க்கதரிசனத்துடன் புரிந்து கொள்ளவில்லை. அரச பயங்கரவாதம் கூர்மையடைந்து, சிங்கள இனவாதப் பூதம் தமிழினத்தை பூண்டோடு அழிக்க கிளம்பிய போதும்கூட இவர்கள் பாராளுமன்ற ஆசனங்களையும், பதவிகளையும் கட்டிப் பிடித்தபடி சிங்களத் தலைவர்களுக்கு ஆதிபாடிக் கொண்டிருந்தார்கள். கூட்டணித் தலைவர்கள் புரிந்த மாபெரும் தவறு என்னவென்றால் தமிழ்ப் புரட்சிவாத இளைஞர் பரம்பரையை அந்நியப்படுத்தி வந்தமையாகும். தேசிய சுதந்திரத்திற்காக நாம் வரித்துக்கொண்ட புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் வரலாற்றுக் கட்டாயத்தையும் அதன் அரசியல் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ளாமல் எமது போருபாய வடிவத்தினை கண்டித்து வந்தனர், எம்மைப் பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என வர்ணித்தனர்.

நாம் போராட்ட களத்தில் இரத்தம் சிந்தியபோது, எமது இளம் வீரர்கள் உயிர்த் தியாகங்கள் புரிந்துவந்தபோது, தமிழ் இனம் சமூகம் தாங்கொணாஒடுக்குமுறைக்கு இலக்காகியபோது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு கூட்டணித் தலைவர்கள் எதையும் உருப்படியாகச் செய்யவில்லை. இவர்கள் செய்ததெல்லாம் எமது ஆயுதப் போராட்டத்தை ஒரு அரசியல் அழுத்தமாகப் பிரயோகித்து, சலுகைகள் வேண்டி சிங்கள அரசுடன் சமரச பேச்சுக்களை நடத்திவந்தனர். இன்று சிங்கள அரசால் தூக்கி யெறியப்பட்டு, அரசியல் அரங்கிலிருந்து அந்நியமாக்கப்பட்டிருக்கும் இந்த வேளையில்தான் புரட்சிகர விடுதலை அமைப்புகளை நாடவேண்டிய ஞானோதயம் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த சூழ்நிலையிலும்கூட நாமே போராடி, எமது மக்களின் விடுதலையை நாமே பெற்றெடுக்க வேண்டும் என்ற தன்நம்பிக்கை இவர்களிடம் இல்லை. இதனால் தான் இந்திய இராணுவப் படையெடுப்பிற்கு இவர்கள் அழைப்புகளை விடுகிறார்கள்.

எமக்கு இந்தியாவின் உதவி அவசியம். இந்தியாவின் ஆதரவும் அவசியம். இந்தியாவின் நல்லெண்ணம் அவசியம்.

நாம் முதலில் இந்தியாவிடம் எமது தனி நாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். எமது மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு வலியுறுத்தவேண்டும். தமிழீழ தனியரசே எமது பிரச்சினைக்கு இறுதியான தீர்வு என்பதை திட்டவட்டமாக எடுத்துரைக்க வேண்டும். எமது கோரிக்கையை தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறி இந்தியாவின் நல்லாதரவைப் பெறுவதை விட்டு எமது பிரச்சினையை தீர்த்துவைக்குமாறு இந்தியாவிடம் கைநீட்டி நிற்பது அரசியற் சாணக்கியம் ஆகாது.

எனது அன்பான தமிழீழ மக்களே!


விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை. கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதை. வியர்வை சிந்தி, இரத்தம் சிந்தி, தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவது தான் சுதந்திரம். சுதந்திரம் இல்லாமல் மனித வாழ்வில் அர்த்தமேயில்லை. நாகரிகம் தோன்றிய காலம்தொட்டு இன்று வரை, சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக ஒடுக்கப்பட்ட மனித சமூகங்கள் போராட்டங்களை நடத்தியிருக்கிறது, யுத்தங்கள் புரிந்திருக்கிறது, புரட்சிகள் செய்திருக்கிறது. சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அமைகிறது. இந்த சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் நிம்மதியாக வாழ முடியாது. சமாதானமாக சந்தோசமாக வாழ முடியாது. சுதந்திரத்தை வென்றெடுக்காதுபோனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும், தன்மானமிழந்து தலைகுனிந்து வாழவேண்டும், பயந்து, பயந்து பதட்டத்துடன் வாழவேண்டும், படிப்படியாக அழிந்துபோக வேண்டும். ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை.

நாம் போருக்குத் தயாராக வேண்டும். அடிமைகளாக வீழ்வதைவிட போராடி வாழ்வதே மேன்மையானது என்ற இலட்சிய உணர்வோடு நாம் ஆயுதம் ஏந்தத் தயாராகவேண்டும். ஈழத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் விடுதலை வேங்கைகளாக, வீரப் புலி இனமாக மாறவேண்டும். விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்புண்டு.

இந்த நெருக்கடியான கால கட்டத்தில் முழு சமுதாயமுமே பேரழிவை எதிர்நோக்கிய இச் சூழ்நிலையில் எம் மத்தியில் சுயநல வுணர்வுகள் களையப்பெற்று சமூக வுணர்வு, இனவுணர்வு பிறக்க வேண்டும். பணத்தை முடக்காமல், உணவு பண்டங்களைப் பதுக்காமல், தான் வாழ்ந்தால் போதும் என்ற தன்னலம் கருதாமல் வசதிபடைத்தோர் வசதியற்றோருக்கு உதவ வேண்டும். பணம் படைத்தோர் பட்டினி கிடப்பவர்களுக்கு உதவவேண்டும். இது ஒரு தேசிய நெருக்கடி, இந்நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத் தேசிய இனமுமே பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்த தேசிய சுமையை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக்கொள்ள அனுமதிப்பது நாம் எமது தேசத்திற்குப் புரியும் துரோகம் என்றே சொல்லவேண்டும்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தமிழீழம் என்றோ ஒரு நாள் உதயமாவது திண்ணம். சமதர்ம சமூகமாக எமது நாடு வளம் கொழிப்பது திண்ணம்.

இந்நம்பிக்கையில் ஆன்ம உறுதி தளராது விடுதலைப் பாதையை நோக்கி வீறுநடை போடுவோமாக.



> வியர்வை சிந்தி,
> இரத்தம் சிந்தி
> தாங்கொணாத்
> துன்பத்தின் பரிசாகப்
> பெறுவதுதான்
> சுதந்திரம். சுதந்திரம்
> இல்லாமல் மனித
> வாழ்வில் அர்த்தமேயில்லை

www.eelamview.com

www.eelamview.com

## கேந்திர சிங்கள நகரத்தின்மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்

வட மத்திய மாகாணத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சிங்கள நகரமான மதவாச்சி மீது விடுதலைப் புலிகளின் கெரில்லா அதிரடிப் படையொன்று திடீர்த் தாக்குதலை நடத்தி பெரும் சேதத்தை விளைவித்தது. முதன் முதலாக ஒரு சிங்களப் பிரதேசம் மீது நடைபெற்ற இத்தாக்குதல் சிங்கள இனவாத அரசுக்கு பெரும் திகிலை ஏற்படுத்தியது.

இச்சம்பவம் மார்ச் 13ந் திகதி அதிகாலை 3 மணியளவில் நடைபெற்றது. இரவோடு இரவாக இந்த சிங்கள எல்லைப்புற நகருக்குள் புகுந்து விடுதலைப் புலி வீரர்கள் முதலில் மதவாச்சி பொலிஸ் நிலையம் மீது தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலின் போது பொலிஸ் கட்டிடங்களில் ஒன்று குண்டுவைத்து தகர்க்கப் பட்டது. சுமார் அரை மணி நேரம்வரை நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 9 கமாண்டோ பொலீஸார் கொல்லப் பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். பொலிஸ் நிலையத்தை தாக்கி சேதமாக்கியபின் எமது கெரில்லா வீரர்கள் மதவாச்சி புகையிரத நிலையம்மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

மதவாச்சி புகையிரத நிலையமானது வட மத்திய மாகாணத்தில் இராணுவக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையமாகும். இங்கிருந்து தான் சிங்களத் துருப்புகள் தமிழ் மாவட்டங்களுக்கு ரயில் மார்க்கமாக அனுப்பப்படுவதுண்டு. இந்தப் புகைரத நிலையத்தை விடுதலைப்புலி வீரர்கள் குண்டு வைத்துத் தகர்த்தனர். புகைரதப் பாதைகளும் நிர்மூலமாக்கப் பட்டன. இதனையடுத்து மதவாச்சி நகரத்திலுள்ள முக்கிய வர்த்தக நிலையங்களையும் எமது கெரில்லா வீரர்கள் குண்டுகளை வைத்து தகர்த்தெறிந்தனர்.

அண்மைக் காலமாக மதவாச்சி சிங்கள ஆக்கிரமிப்பின் தளப் பிரதேசமாக இருந்துவந்தது. இங்கிருந்து தான் பராக்கிரம இராணுவ அணியைச் சேர்ந்த சிங்களத் துருப்புகளும் சிங்கள காடையர்களும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய தமிழ்ப் பகுதிகளில் பிரவேசித்து பெரும் அட்டூழியங்கள் புரிந்து வந்தனர். இந்த இராணுவக் கொடுமைகள் காரணமாகவே மன்னாரிலிருந்து தமிழ் மக்கள் அகதிகளாக தமிழ் நாட்டில் தஞ்சம்புகத் தொடங்கினர்.

மதவாச்சி நகரம்மீது நாம் நடத்திய தாக்குதல் சிங்கள அரசுக்கு ஒரு எச்சரிக்கை நடவடிக்கையாகும். இரண்டு இலட்சம் சிங்களவர்களுக்கு பயிற்சி அளித்து, ஆயுதம் தரித்து தமிழ்ப் பகுதிகளுக்குள் குடியேற்ற திட்டமிட்டு வந்த சிங்கள அரசுக்கு எமது தாக்குதல் பேரதிர்ச்சியாக அமைந்தது. எந்த நேரத்திலும் சிங்களப் பிரதேசங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை சிங்கள அரசுக்கு நாம் உணர்த்தியதோடு தமிழ்ப் பிரதேசத்திலுள் சிங்களவரைக் குடியேற்றும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கமாயும் இத்தாக்குதலை நாம் மேற்கொண்டோம்.

## புல் மோட்டையில் அதிரடித் தாக்குதல்.

புல்மோட்டையில் இராணுவத்தின் பராக்கிரம அணியினரும் சிங்களக் காடையர்களும் சேர்ந்து தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து தமிழர்களை விரட்டி வந்தனர். பராக்கிரம இராணுவ அணியினரும், சிங்களக் காடையர்களும் சேர்ந்து தொக்கிளாய், கொக்குச் சாவடி, ஒதிய மலை, பட்டிக் குடியிருப்பு, டொலர் பாம், கென்பாம், போன்ற பிரதேசங்களில் வசித்து வந்த தமிழர்களது சொத்துக்களைச் சூறையாடி வீடுகளுக்கு தீ வைத்து துன்புறுத்தி வந்தனர். இவர்களது பயங்கரவாத செயல்களை கட்டுப்படுத்தி தமிழ் பிரதேசத்தில் இருந்து சிங்கள இராணுவத்தை வெளியேற்றும் நோக்கோடு எமது தாக்குதல பிரிவு 18-12-1984ம் திகதி புல்மோட்டையில் நிலக்கண்ணிகளை வைத்து காத்து இருந்தனர். பராக்கிரம இராணுவ அணி டிரக் வந்ததும் நிலக்கண்ணிகளை வெடிக்கப்பண்ணி ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக இராணுவ வாகனங்களமீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் பராக்கிரம இராணுவ அணியைச் சேர்ந்த இராணுவ டிரக் வாகனம் ஒன்று முற்றாகச் சேதம் அடைந்தது. இரண்டு இராணுவ உயர் அதிகாரிகள் உட்பட 35 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல இராணுவத்தினர் படுகாயம் அடைந்தனர்.

வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்திய எமது தாக்குதல் பிரிவின் புதுக் குடியிருப்பு இரணைப்பாலையைச் சேர்ந்த கிருஸ்ணானந்தனும் (கடாபி) திரியாயைச் சேர்ந்த குணம் (ஐங்கரன்) ஆகிய இரு இளம் புலிகள் வீரமரணமடைந்தனர். எமது தரப்பில் வேறு எந்தவித உயிர்ச்சேதங்களும் இன்றி இத் தாக்குதலை முடித்துக்கொண்டு தமது தளங்களுக்கு வெற்றிகரமாக மீண்டனர்.

# போர்க் களத்தில் சாதனை

## முற்றுகையை புலிகள் முறியடித்தனர். 20 இராணுவத்தினர் பலி; வாகனங்கள் தகர்ப்பு.

சிங்கள இராணுவத்தினர் எமது தளம் ஒன்றை சுற்றி வளைத்து நடத்திய பெரிய தாக்குதல் ஒன்றை எமது கெரில்லா வீரர்கள் வெற்றிகரமாக முறியடித்தனர். இத் தாக்குதலில் 20 இராணுவத்தினர் கொல்லப் பட்டதுடன், இரு இராணுவ வாகனங்கள் நாசமாக்கப்பட்டன. இச் சம்பவம் ஜனவரி 30-ம் திகதி பருத்தித்துறைக்கு அருகாமையிலுள்ள பொலிகண்டி எனப்படும் கரையோரக் கிராமத்தில் நடைபெற்றது.

30-ந் திகதியன்று இரவு 11 மணியளவில் 100க்கும் அதிகமான இராணுவத்தினரைக் கொண்ட அதிரடிப் படையொன்று இராணுவக் கவச வண்டிகள் சகிதம் எமது தளம் ஒன்றை முற்றுகையிட்டு தாக்குதலில் இறங்கியது. தயார் நிலையிலிருந்த எமது கெரில்லா வீரர்களும் எதிரியோடு மோதினார்கள். இரு தரப்பிலும் கடுமையான சண்டை மூண்டு 5 மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றது. எதிரியிடம் ஆட்பலம் அதிகமாக இருந்தபோதும் எமது கெரில்லாக்கள் வீரத்துடனும், உறுதியுடனும் போராடி, முற்றுகையை முறியடித்து எதிரியைப் பின்வாங்கி ஓடச்செய்தனர். இந்தத் தாக்குதலில் எமது வீரர்கள் ராக்கட் போன்ற நவீனரகமான ஆயுதங்களைப் பிரயோகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்ட இந்த எதிர்த் தாக்குதலில் 20 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமுற்றனர். ராக்கட் தாக்குதலில் இரண்டு இராணுவ கவச வாகனங்கள் நொறுக்கப்பட்டன. எமது தரப்பில் எவருக்கும் உயிர்சேதமோ, காயமோ ஏற்படவில்லை.

தனது இராணுவ உயிர்ச் சேதங்களையும், இழப்புகளையும் மூடி மறைப்பதற்காக சிறிலங்கா அரசு தமிழீழப் பகுதிகளில் நிகழும் இராணுவ நடவடிக்கைகள் சம்பந்தமாக கடும் பத்திரிகைத் தணிக்கையை விதித்துள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது. விடுதலைப் போராளிகளுக்கு எதிராகத் தொடுத்துள்ள இராணுவ போராட்டம் படுதோல்வி அடைந்து வருகிறது, என்பதைச் சிங்கள மக்களுக்கும், உலகத்திற்கும் இருட்டடிப்புச் செய்வதற்காகவே இந்த தணிக்கை விதிக்கப்பட்டிருக்கிறது.



## ஹெலிகாப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டது.

ஶ்ரீலங்கா விமானப்படையைச் சேர்ந்த ஹெலிகெப்டர் ஒன்றை விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்த கெரில்லா வீரர்கள் அணியொன்று சுட்டு வீழ்த்தியது. இந்தச் சம்பவம் 19-3-85 பருத்தித்துறைக்கு அண்மையிலுள்ள நாகர்கோவில் கடற்கரையில் நிகழ்ந்தது.

விடுதலைப் புலி இயக்க கெரில்லா அணியொன்று கடற் பயிற்சியில் ஈடுபட்டு இருந்த போது ஶ்ரீலங்கா விமானப்படையைச் சேர்ந்த இரு கடல் விமானங்களும் இரு ஹெலிகெப்டர்களும் திடீர்த் தாக்குதலை நடத்தின. அப்போது எமது வீரர்கள் இயந்திரத் துப்பாக்கிகளைக் கொண்டு எதிரி விமானங்கள் மீது எதிர்த் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் தாழ்வாகப் பறந்து கொண்டிருந்த ஹெலிகெப்டர் ஒன்று சூட்டுக்கு இலக்காகியது. சுடப்பட்ட விமானம் கரும்புகைகளைக் கக்கிக் கொண்டு கரையோரமாக விழுந்து நொறுங்கியது. இதிலிருந்த விமானப்படையினர் அனைவரும் இறந்திருக்கலாம் என நம்பப் படுகிறது.

இந்தக் ஹெலிகெப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டதை அடுத்து ஏனைய விமானங்கள் அங்கிருந்து பின்வாங்கின.

எமது தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை. எமது வீரர்கள் அனைவரும் வெற்றியுடன் தளத்துக்குத் திரும்பினர்.

## சிங்கள இராணுவ முகாம்மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்கிளாய் இராணுவ முகாம் மீது விடுதலைப்புலி வீரர்கள் நடத்திய உக்கிரமான, வெற்றிகரமான தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமான சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். தமிழீழ மண்ணில்நிலைகொண்டிருக்கும் சிங்கள இராணுவ முகாம் ஒன்றின் மீது முதன் முதலாக மேற்கொள்ளப் பட்ட பெரிய கெரில்லா தாக்குதல் இதுவாகும்.

இத்தாக்குதல் பிப்ரவரி 13ந் திகதி அதிகாலை நடைபெற்றது. நவீனமான, கனரக ஆயுதங்களுடன் எமது கெரில்லா அதிரடிப் படை அணியொன்று இந்த இராணுவ முகாமை சூழ்ந்து கொண்டு தாக்குதலை ஆரம்பித்தது. இதனையடுத்து இரு தரப்பிலும் கடும் சண்டை மூண்டது. சுமார் 5 மணி நேரம் வரையில் நடைபெற்ற இந்தச் சண்டையில் இராணுவத்தினரின் பாதுகாப்பு அரண்களை உடைத்துக்கொண்டு எமது வீரர்கள் முகாமிற்குள் புகுந்து நேருக்கு நேர் எதிரியுடன் சமரிட்டனர். இராணுவத்தினர் தரப்பில் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டது. விடுதலைப் புலி வீரர்களின் மூர்க்கமான, வீராவேசமான தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாது இறுதியில் இராணுவத்தினர் சிதறி ஓடினர்.

இந்தத் தாக்குதலில் மொத்தம் 106 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 25 பேர் வரை படுகாயமுற்றனர். எமது தரப்பில் 16 இளம் புலிகள் களத்தில் நின்று கடைசிவரை போராடி வீரமரணம் எய்தினர். 9 வீரர்கள் காயமுற்றனர்.

இது இவ்வாறிருக்க முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து உதவிக்கு அழைக்கப்பட்ட இராணுவ படை மீதும் எமது கெரில்லா அணியொன்று தாக்குதலை நடாத்தியது. நாயாறு என்னுமிடத்தில் கண்ணிவெடி வைத்து நடாத்திய தாக்குதலில் 28 இராணுவத்தினர் கொல்லப் பட்டனர் பலர் படுகாயமடைந்தனர். இராணுவ வாகனங்களும் சேதமடைந்தன.

விடுதலைப் புலி வீரர்களின் இந்த வெற்றிகரமான தாக்குதல்களை அடுத்து முல்லைத்தீவில் கொக்கிளாய், திரியாய் என்னுமிடங்களிலுள்ள இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்க் கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்த சிங்கள இராணுவத்தினர் இப்பொழுது பதவியா என்னும் சிங்கள பிரதேசத்தில் நிலைகொண்டுள்ளனர்.

தமிழீழ மண்ணிலிருந்து சிங்கள ஆயுதப் படைகளை விரட்டியடிக்கும் எமது போராட்ட இலட்சியத்திற்காக, முதன் முதலாக் இராணுவ முகாம் ஒன்றை தாக்கி உயிர்த் தியாகம் செய்த இளம் போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் வீர வணக்கம் செலுத்திக் கொள்கிறது.



www.eelamview.com

www.eelamview.com

# எமது விடுதலைப் பாதையும் கூட்டணியும்

ஈழத் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையில் இன்று ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. ராஜதந்திர, அரசியல் ரீதியான அணுகுமுறைகளுக்கு கதவடைக்கப்பட்டதால் ஆயுத வடிவான அரசியற் போராட்டம் இனி முதன்மை பெறுகிறது. ஈழத் தமிழரின் அரசியற் தலைவிதியை நிர்ணயிக்கும் ஒரே சக்தியாக, ஒரே மார்க்கமாக அமையப் போவது புரட்சிகர ஆயுதப் போராட்டம் என்பதில் ஐயமில்லை. குழப்பகரமான தில்லுமுல்லு அரசியல் நாடகங்களுக்குப் பதிலாக இனித் தெட்டத் தெளிவான, வரையறுக்கப்பட்ட விடுதலைப் போராட்டம் அரங்கேறப்போகிறது. இதில் இரண்டு பாத்திரங்களுக்கு மட்டுமே இடமுண்டு ஒன்று தமிழ் கெரில்லாப் போராளிகள் மற்றது சிங்கள ஆயுதப் படைகள். பழைமைவாத, பாராளுமன்ற தமிழ் அரசியல்வாதிகளுக்குப் பதிலாக இனிப் புதிய, புரட்சிகர இளம் பரம்பரை விடுதலையை முன்னெடுத்துச் செல்லும்.

கிட்டத்தட்ட முப்பது ஆண்டு காலமாக ஈழத் தமிழ் இனத்தை அழிவுப் பாதையில் இட்டுச் சென்ற கூட்டணித் தலைமை இன்று அரசியற் பாலைவனத்தில் அந்நியமாக்கப்பட்டிருக்கிறது. பாராளுமன்ற ஆசனங்களையும், வட்டமேசைகளையும் கட்டிப் பிடித்துக்கொண்டு விடுதலைப் போராட்டத்தை சதா பின் தள்ளி வந்த இந்த சந்தர்ப்பவாதத் தலைமை இனவெறிபிடித்த சிங்களத் தலைவர்களை நம்பி, நம்பி ஏமாந்து இன்று நடுத் தெருவில் நிற்கிறது.

கொழும்பு-டெல்லி ராஜதந்திர சதுரங்க ஆட்டத்தில் பகடைக் காய்களாக நகர்ந்துவந்த கூட்டணித் தலைமை இன்று நகரமுடியாத கட்டத்திற்கு வந்திருப்பது யாவரும் அறிந்ததே. புரட்சிகர ஆயுதப் போராளிகளே போராட்டத்தை முன்னெடுக்கும் அரசியல் சக்திகள் என்பதை நன்கு உணர்ந்துகொண்ட சிங்கள அரசு, கூட்டணியுடன் பேசுவதாலோ ஒப்பந்தங்கள் செய்துகொள்வதாலோ எவ்வித பயனுமில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. இதனால்தான் ஜெயவர்த்தன கூட்டணிக்கு கதவை அடைத்து விட்டார். கூட்டணியின் அரசியல் முக்கியத்துவமற்ற தன்மை இந்திய அரசும் அறியாததல்ல. ஈழத் தமிழ் புரட்சிகர விடுதலை அணிகளுக்கும் கூட்டணிக்கும் அரசியல் ரீதியாக எவ்வித இணக்கப்பாடும் இல்லை என்பதை டெல்லி வட்டாரங்கள் நன்கறியும். இதனால் இரு புறத்திலும் கைவிடப்பட்டு அரசியல் சூனியத்தில் தள்ளப்பட்ட இத்தலைமை, புரட்சிகர விடுதலை அணிகளை அரவணைத்துக்கொள்ளும் நோக்கில் ஒற்றுமை என்ற நாடகத்தை அரங்கேற்றிவருகின்றது. காலம் காலமாக புரட்சிகரப் போராளிகளை ஒதுக்கிவைத்து பிளவு படுத்தி, ஆயுதப் போராட்டத்தை இழிமைப்படுத்தி, ஏளனம் செய்து வந்த இந்த அகிம்சாமூர்த்திகள் இன்று ஆயுதப் போராளிகள் மத்தியில் ஒற்றுமை வேண்டும் என முதலைக் கண்ணீர் வடிப்பது எமக்கு விந்தையைக் கொடுக்கிறது.

புரட்சிகர விடுதலை அமைப்புகள் மத்தியில் இன்று ஒற்றுமை அத்தியாவசியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் ஒற்றுமையை உருப்பெறச் செய்யும் பொறுப்பு **இந்த புரட்சிகர அமைப்புகளையே சார்ந்தது.** அமைப்பு ரீதியாக, இலட்சிய ரீதியாக, சித்தாந்த ரீதியாக, போர் முறை ரீதியாக நாம் கூட்டணியிலிருந்து முற்றிலும் வேறுபட்ட சக்திகள். போராட்ட இலட்சியங்களைப் பொறுத்தவரை புரட்சிகர விடுதலை அணிகள் மத்தியில் பாரிய முரண்பாடுகள் இருக்கவில்லை. சுதந்திர தனியரசு, சோசலிசப் புரட்சி ஆகிய இலக்குகளில் அசையாத நம்பிக்கையும், தேசிய சுதந்திரத்தை அடைய ஆயுதப் போராட்டப் பாதையே ஒரே வழி என்ற உறுதிப்பாடும் எம்மை அடிப்படை இலட்சியங்களில் இணைக்கின்றன. ஆனால் கூட்டணியோ எமது இலட்சியத்திலிருந்து முரண்பட்ட ஒரு பிற்போக்கு அரசியல் சக்தி.

இன்று கூட்டணி ஒரு கட்டுப்பாடான, கட்டுக்கோப்பான கட்சியமைப்பாக இயங்கவில்லை. கட்சியின் தலைமைப்பீடம் உருக்குலைந்து கிடக்கிறது. அரசியற் தலைமைப்பீட (Politburo) அங்கத்தினர் வலது, இடது, நடுப்போக்கு என்ற ரீதியில் முரண்பட்ட திசையில் இழுபடுகின்றனர். தமிழீழத்தில் கூட்டணிக்கு இன்று தளமில்லை மக்கள் மத்தியில் பெரும் வெறுப்பையும் எதிர்ப்பையும் தேடி வைத்திருக்கிறது.

கூட்டணியின் அரசியல் இலட்சியம் மிகவும் குழப்பகரமானதாக, குளறுபடியானதாக இருக்கிறது. 77 தேர்தல் வெற்றியுடன் தமிழீழத் தனியரசுக் கோரிக்கையை கைவிட்டு, மாற்றுத் தீர்வுக்காக (Alternative Solution) வட்ட மேசையை சுற்றி வந்து இப்பொழுது மூக்குடைபட்டுக் கிடக்கிறார்கள். இந்த மாற்றுத் தீர்வுதான் என்ன என்பதை இவர்கள் சிங்கள அரசிடமோ, இந்திய அரசிடமோ தெட்டத் தெளிவாக எடுத்துரைக்கவில்லை. பேச்சுவார்த்தை தோற்றுப் போனால் சாத்விகப் போராட்டம் ஆரம்பிக்கப் போகிறோம் என்று பிரகடனம் செய்து வந்த இந்தக் காந்தியத் தளபதிகள் இன்று தமிழ்நாட்டில் இருந்துகொண்டு இந்திய இராணுவம் படையெடுக்க வேண்டும் என்று குரல் கொடுக்கிறார்கள். சந்தர்ப்பவாதத்தைத் தவிர, இவர்களுக்கு அரசியலில் எந்தவொரு கொள்கைப் பற்றோ இலட்சியமோ இருந்ததுமில்லை. இருக்கப்போவதுமில்லை.

எந்தவொரு புரட்சிகர அரசியல் சித்தாந்தத்தையும் கூட்டணி தழுவிக்கொள்ளவில்லை. வறட்டு தேசிய வாதத்தை கிளறிவிட்டு, உணர்ச்சிப் பாங்கான பிரகடனங்களை வெளியிட்டு, மக்களை சதா ஏமாற்றிவந்ததைத் தவிர இவர்களிடம் தெளிவான, புரட்சிகர அரசியற் பார்வையோ, கொள்கைத் திட்டமோ இருந்திருக்கவில்லை.

அறுபதின் ஆரம்பத்தில் சாத்விகப் போராட்டத்தை தேசிய ரீதியில் முன்னெடுத்த இந்த காந்தியவாதிகள் சிங்கள இராணுவ அடக்குமுறையை எதிர்கொள்ளத் திராணியற்று, அகிம்சைப் போராட்டத்தைக் கைவிட்டனர். 77லிருந்து அரச பயங்கரவாதம் கூர்மையடைந்து எமது மக்கள் தாங்கொணா ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டபோதும் கூட இவர்கள் சாத்விகப் போராட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை. மென்முறைப் போருபாயங்களை கைவிட்டதும் அல்லாமல் இளைஞரின் வன்முறைப் போராட்டத்தை வன்மையாகக் கண்டித்தும் வந்தனர். விடுதலை அமைப்புகளின் புரட்சிகர ஆயுதப் போராட்டப் பாதையில் இவர்களுக்கு நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இருந்தால் இந்திய இராணுவப் படையெடுப்புக்கு இவர்கள் அறைகூவல் விடுவதுதான் எதற்கு?

அமைப்பு, இலட்சியம், சித்தாந்தம், போருபாயம் ஆகிய அம்சங்களில் மட்டுமன்றி வர்க்க நலன்களைப் பொறுத்தவரையும் புரட்சிகர விடுதலை அமைப்புகளிலிருந்து கூட்டணி வேறுபட்ட சக்தியாக விளங்குகிறது. வரலாற்றுச் சூழ்நிலைகளால் போராட்ட களத்திலிருந்து பிரசவமெடுத்த புரட்சிகர சக்திகள் நாம். விவசாய, தொழிலாள வர்க்கங்களின் அபிலாசைகளைப் பிரதிநிதிப்படுத்தும் எமக்கும், கொழும்புத் தமிழ் தரகு முதலாளி வர்க்கத்திற்கு முண்டுகொடுக்கும் கூட்டணிக்கும் பாரிய வர்க்க நல முரண்பாடுகள் உள்ளது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

கூட்டணி இன்று புரட்சிகர விடுதலை அமைப்புகளை நாடுவதன் நோக்கம் என்ன? ஒற்றுமை வேதாந்தம் பேசுவதன் அந்தரங்கம்தான் என்ன? விடுதலை அமைப்புகளோடு கூட்டுச் சேர்ந்து ஒரு புதிய கூட்டணியை உருவாக்கி அதன் அரசியற் தலைமையை கைப்பற்றுவதற்கா? நாம் வெறும் ஆயுதப் போராளிகள், அவர்கள் அரசியல் மேதாவிகள்; நாம் களத்தில் போராடி செத்து மடியவேண்டும், அவர்கள் எமது புதைகுழிகள்மீது நின்று அரசியல் நாடகம் நடத்த வேண்டும். இதனையா கூட்டணி விரும்புகிறது?

இன்று சிறிலங்கா அரசானது அரசியல் ரீதியான அணுமுறைகளைக் கைவிட்டு இராணுவப் பாதையை தேர்ந்தெடுத்திருக்கிறது. இந்த இராணுவ பயங்கரவாத அணுகுமுறை முறியடிக்கப்படும்பட்சத்தில் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியதுபோல வட்டமேசை மகாநாடு கூட்டப்படலாம். தமிழ் மக்களுக்கு குறைந்தபட்ச சலுகைகள் வழங்க சிறிலங்கா அரசு முன்வரலாம். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல், "இந்திய அரசு சொல்கிறது." "இந்திய அரசு சொல்கிறது" என்ற வழமையான சாக்குகளைச் சொல்லி மீண்டும் கூட்டணித் தலைமை கொழும்புக்கு காவடி எடுத்து எமது மக்களின் விடுதலைக்கு விலைபேச விழையலாம். ஆகவே எமது புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை அரசியல் தீர்வுக்கான வெறும் அழுத்தமாக மட்டும் பிரயோகித்து, சலுகைகளைப் பெறுவதற்கு இந்த சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் முயற்சிக்கலாம்.

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டுதான் நாம் கூட்டணியை அணுகவேண்டும். கூட்டணித் தலைமை எம்மீது குதிரைவிடாமல் இருப்பதற்கும், எமது விடுதலை இலட்சியத்திற்கு குந்தகம் ஏற்படாமல் இருப்பதற்கும் நாம் கூட்டணிக்கு சில முன் நிபந்தனைகளை இறுக்க வேண்டும்.

**முதலாவதாக, சுதந்திர தமிழீழ தனியரசே தமிழர் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வு, ஒரே தீர்வு என்பதை கூட்டணித் தலைமை பகிரங்கமாக உத்தியோக பூர்வமாக அறிவிக்க வேண்டும்.**

ஈழத் தமிழர் தேசிய இனப் பிரச்னை இன்று மிகவும் சிக்கலான, குழப்பமான நிலையை அடைந்திருப்பதற்கு கூட்டணியின் தெளிவற்ற நிலைப்பாடே காரணம். தனியரசுக்கு மக்களிடம் ஆணை பெற்று பாராளுமன்றம் சென்றதும், மாவட்ட சபை, மாகாண சபை, பிரதேச சபை என்று குழம்பி, எந்தவொரு திட்டவட்டமான தீர்வையும் முன் வைக்காமல், "மாற்றுத் திட்டம் ஒன்று தாருங்கள். நாம் மக்களிடம் கொண்டு செல்கிறோம்" என்று சிங்கள அரசிடமே மண்டியிட்டதால் ஒரு குழப்பகரமான நிலைமை எழுந்தது. கூட்டணித் தலைமை பாதை தெரியாமல் தடுமாறி நின்ற காரணத்தாலேயே சிங்கள அரசும் வட்டமேசை மாநாட்டை சதா ஒத்திப்போட்டு தனது இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்த வாய்ப்பு ஏற்பட்டது. கூட்டணியின் தெளிவற்ற நிலைப்பாட்டால் இந்திய அரசும் உருப்படியான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள முடியவில்லை. சர்வதேச ரீதியிலும் எமது பிரச்னையில் குழப்பம் ஏற்பட்டது. எமது தனிநாட்டுப் போராட்டம் நியாயமானது, ஒரு தேசத்தின் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டது என்ற ரீதியில் ஈழத் தமிழர் பிரச்னையை சர்வதேசமயப்படுத்தி உலக சமுதாயத்தின் நல்லாதரவைப் பெறுவதற்கு முடியாமல் போனதற்கும் கூட்டணியின் அரசியல் குளறுபடியே காரணம்.

"கூட்டணி தலைவர்கள் மிதவாதிகள், பேச்சுக்கள் மூலம் சலுகைகள் பெற்று அரசியல் தீர்வு காண விழைகிறார்கள். புரட்சிகர விடுதலை அமைப்புகளின் தலைவர்கள் தீவிரவாதிகள், பிரிவினைவாதிகள். இவர்கள் தனியரசு கோருகிறார்கள்" என்ற ரீதியில் தமிழர் கோரிக்கை முரண்பட்ட இரு துருவங்களாக உலக ரீதியில் அணுகப்பட்டமைக்கு காரணகர்த்தாக்கள் கூட்டணியினரே. ஆகவே கூட்டணித் தலைமை இனியும் தனது நிலைப்பாட்டில் குழப்பாமல் சுதந்திரத் தனியரசுதான் ஒரே தீர்வு என்பதை திட்டவட்டமாக அறிவிக்கவேண்டும். அப்படி அறிவிக்கத் தவறும் பட்சத்தில் கூட்டணித் தலைமை இன்னமும் இனத்துரோக, சந்தர்ப்பவாத அரசியல் செப்படிவித்தை காட்டவே விரும்புகிறது என்பது அம்பலமாகும்.

"இந்திய அரசு அப்படிச் சொல்கிறது. இப்படிச் சொல்கிறது. இந்தியாவின் அனுசரணையோடுதான் அரசியலை நடத்துகிறோம்" என்று இனியும் மக்களை ஏமாற்ற முடியாது. எமது கோரிக்கையை திட்டவட்டமாக இந்திய அரசுக்கும், உலகிற்கும் இடித்துச் சொல்லக் கூட்டணித் தலைமை தயங்குவது ஏன் என்பது எமக்குப் புரியாத புதிராக இருக்கிறது. ஈழத் தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு இந்திய அரசிடம் நாம் வற்புறுத்துவதில் என்ன தவறுண்டு? பாலஸ்தீனியர்களதும், நமீபிய மக்களதும் சுயநிர்ணய உரிமையை இந்தியா அங்கீகரிக்கவில்லையா? எமது பிரச்னைக்கு எது முடிவான தீர்வு, நியாயமான தீர்வு என்பதை தீர்மானிக்கும் உரிமை எமக்குண்டு. நாம் தீர்மானித்த முடிவை உலகிற்கு அறிவித்து, அது நியாயமானதென்பதை எடுத்து விளக்குவதுதான் சாலச் சிறந்தது. அதைவிடுத்து, கொழும்புக்கும் டெல்லிக்கும் காவடி எடுத்து எமது பிரச்னைக்கு தீர்வுவைக்குமாறு அவர்களை மன்றாடுவது அரசியல் சாணக்கியம் அல்ல. **தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு கூட்டணித் தலைமை இந்திய அரசை வற்புறுத்தவேண்டும்.**

**இரண்டாவதாக, கூட்டணி எமது ஆயுதப் போராட்டத்தை பகிரங்கமாக, உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்க வேண்டும்.**

இன்று எமது அரசியற் போராட்டம் ஆயுதப் போர் வடிவம் பெற்றிருக்கிறது. போராட்ட களத்தில் எமது இளம் போராளிகள் ஒப்பற்ற தியாகங்களைப் புரிந்து வருகிறார்கள். எதிரிக்குப் பெரும் சவாலாக நின்று விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து வருவது ஆயுதம் தாங்கிய புரட்சிப் போராளிகளே. எமது ஆயுதப் போராட்டத்தின் விளைவாகவே இன்று தமிழர் பிரச்னை உலகளாவிய ரீதியில் பிரபல்யப்பட்டு வருகிறது. எமது ஆயுத வடிவ அரசியற் போராட்டம் நியாயமானது, இனப் படுகொலையிலிருந்து எமது மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்தைக் கொண்டது, தேசிய சுதந்திரத்தை இலட்சியமாகக் கொண்டது, என்ற ரீதியில் நாம் எமது போராட்ட வடிவத்திற்கு உலக அங்கீகாரம் பெற எம்மாலான முயற்சிகளை செய்து வருகிறோம். இந்த ஆயுதப் போராட்டத்தில் கூட்டணியின் நிலைப்பாடுதான் என்ன?

பாராளுமன்றத்தில் வீற்றிருந்து சிங்கள அரசுக்கு அடிவருடியாக இருந்த காலத்தில் கூட்டணி எமது போர் நடவடிக்கைகளை பகிரங்கமாகக் கண்டித்து வந்திருக்கிறது. எம்மைப் 'பயங்கரவாதிகள்' என்றும் 'Criminals' என்றும் சாடியதுடன், பலாத்காரப் பாதையால் எதையுமே சாதித்துவிட முடியாது என்றும் பகிரங்கமாக அறிக்கைகள் விட்டு எமது போராட்டப் பாதையை ஏளனம் செய்து வந்திருக்கிறது. தமிழ் இளம் போராளிகள் தாவேட்டையாடப்பட்டு, சிறை சென்று, சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டபோதெல்லாம் வாய்மூடி மௌனிகளாக இருந்துகொண்டு 'ஜெயவர்த்தன நல்ல மனிதர்'. 'பிரேமதாசாவின் புன்னகையில் மயங்கிவிட்டோம்' என்றெல்லாம் சிங்கள அரசுக்கு துதிபாடி வந்திருக்கிறது. "ஆயுதங்களைப் போட்டுவிட்டு சரணடையுங்கள். அரசிடமிருந்து மன்னிப்பு பெற்றுத் தருகிறோம்" என்றுகூட சிங்கள அரசாங்கத்தின் சூத்திரகாரச் சதிக்கு கூட்டணித் தலைமை உடந்தையாக இருந்திருக்கிறது. இப்படியெல்லாம் புரட்சிகர இளைஞரின் ஆயுதப் போராட்டப் பாதைக்கு முட்டுக்கட்டையாக இருந்து வந்த கூட்டணி இன்று விடுதலை அமைப்புகளை நாடி வருகிறது. அப்படியிருந்தும் எமது ஆயுதப் போர் முறையில் இவர்களுக்கு இன்றும் நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை. நாமே போராடி எமது சுதந்திரத்தை வென்றெடுக்கவேண்டும் என்பதில் இவர்களுக்கு இன்றும் நம்பிக்கை பிறக்கவில்லை. அதனால்தான் இந்திய இராணுவம் படையெடுக்கவேண்டும் என பிதற்றி வருகிறார்கள்.

ஆகவேதான் போர் முறைத் திட்டத்திலும் இவர்கள் ஒரு தெளிந்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். புரட்சிகர விடுதலை அமைப்புகளின் ஆயுதப் போராட்டத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவை அளிக்கவேண்டும்.

**மூன்றாவதாக, அரசியற் சித்தாந்தத்திலும் கூட்டணி தனது கொள்கைப்பாட்டை தெளிவுபடுத்துவது அவசியம்.** புரட்சிகர விடுதலை அமைப்புகள் புரட்சிகர சோசலிச சித்தாந்தத்தை தமது புரட்சித் தத்துவார்த்தமாக ஏற்றிருக்கின்றன. சுதந்திர தமிழீழம் ஒரு சமதர்ம சமுதாயமாக புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதி பூண்டிருக்கிறோம். கூட்டணிக்கு அன்றுதொட்டு, இன்றுவரை ஒரு தெளிந்த தத்துவார்த்த நிலைப்பாடு இருக்கவில்லை, சோசலிச புரட்சிப் பாதையை இவர்கள் அங்கீகரிக்காத பட்சத்தில் கூட்டணியை நாம் அணைத்துக்கொள்வதென்பது ஒரு பிற்போக்கான எதிர்ப் புரட்சி சக்திக்கு இடமளிப்பதாக அமையும்.

**எமது அரசியல் வரலாற்றிலேயே மிகவும் நெருக்கடியான இந்தக் காலகட்டத்தில், நாம் முன்னெடுத்து வரும் புரட்சிகர விடுதலைப் போராட்டம் முதிர்ச்சி பெற்று வரும் இச் சந்தர்ப்பத்தில், அரச பயங்கரவாதம் கூர்மையடைந்து எமது மனோவுறுதிக்கு சவால் விடும் இந்த சூழ்நிலையில், நாம் எமது புரட்சிகர இலட்சியங்களிலிருந்து வழுவாமல் இருப்பது அவசியம். தாங்கொணாத துன்பங்கள் மத்தியிலும் எமது மக்களின் நம்பிக்கை இன்னும் தளரவில்லை. மக்களின் நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்பிற்கும் பாத்திரமாக இருப்பது இன்றைய புரட்சிகர இளம் பரம்பரையாகும். எனவே எமது மக்களின் விடுதலையை முன்னெடுக்கும் மாபெரும் வரலாற்றுப் பொறுப்பு எம்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில், பிற்போக்கான எதிர்ப் புரட்சி சக்திகளின் வர்க்க அபிலாசைகளையும், அரசியற் சந்தர்ப்பவாதத்தையும் இனம் காணத் தவறினால் மாபெரும் வரலாற்றுத் தவறை இழைத்தவர்கள் ஆவோம்.**

www.eelamview.com

www.eelamview.com



# ஒதியமலைப் படுகொலை

தமிழீழப் பகுதியில் இருந்து தமிழர்களை விரட்ட திட்டமிட்ட அடிப்படையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு வருவது இன்று சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது. தமிழீழத்தின் எல்லைப் புறத்தில் அமைந்துள்ள முல்லைத் தீவு மாவட்டத்தின் ஒதியமலைப் பிரதேசத்தில் நூற்றுக்கு மேற் பட்ட தமிழர்கள் வீடுகளில் இருந்து கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். நவம்பர் மாதம் 29ம் திகதியில் இருந்து டிசம். 2ம் திகதி வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது வீடுகளுள் புகுந்த சிங்கள இராணுவம் அப்பாவித் தமிழர்களைக் கடத்திச் சென்று சுட்டுக் கொன்றுள்ளது.

சிங்கள இராணுவத்தின் "திடீர்ப் படுகொலைத் திட்டத்தால்" பீதியடைந்த ஒதியமலைத் தமிழர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கோவில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் அடைந்துள்ளனர்.


கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில், பயங்கரச் சித்திரவதைகளின்பின், கண்களும் வாய்களும் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டு கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழர்களது உடல்கள் ஒதியமலைக் கிராம முன்னேற்ற சங்கக் கட்டிடத்திலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் அனேகர் திருமணமாகி குடும்பத்துடன் வாழ்ந்து வந்தவர்கள். இவர்களில் பலர் முதியோர்கள். ஆனால் இக்கொலைகளைப் புரிந்த அரச பயங்கரவாதிகளின் தலைவரும் (சிங்களப்) பாதுகாப்பு அமைச்சருமான அத்துலத் முதலி இவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் எனக் கூறியுள்ளார். அழுகிய நிலையில் கண்டுபிடிக்கப் பட்ட 30 பேரின் சடலங்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் அடங்கி இருந்தனர். இவர்கள் 'பயங்கரவாதிகள்' அல்லர். அப்பாவித் தமிழர்களே, என்பதை உறுதி செய்வதற்காக அவர்களது முழு விபரத்தையும் தருகிறோம்.






| | |
|---|---|
| ச. தருமலிங்கம் | 4 பெண் பிள்ளைகள் |
| நா. கேதீஸ்வரன் | (திருமணமாகி இரு மாதம் இளைஞர்) |
| ச. நடராசா | இளைஞர் |
| க. சின்னையா | 2 ஆண் 2 பெண் பிள்ளைகள் |
| சா. செல்வராசா | 3 ஆண்கள் 1 பெண் பிள்ளை (பச்சிலைப் பள்ளியில் இருந்து வயல் வேலைக்காக ஒதியமலைக்கு வந்தவர். இவர் கொலை செய்யப் பட்டதோடு இவரது உழவு இயந்திரமும் கொழுத்தப்பட்டுள்ளது.) |
| க. சின்னையா | 2 ஆண் 2 பெண் பிள்ளைகள் |
| ச. சபாரத்தினம் | 4 பெண் 2 ஆண் பிள்ளைகள் |
| ச. சண்முகசுந்தரம் | திருமணமாகி 5 மாதம் |
| க. சிவசுந்தரம் | 5 பெண் பிள்ளைகள் |
| கா. சதாசிவம் | 2 பெண் 3 ஆண் பிள்ளைகள் |
| து. ஜெகநாதன் | இளைஞர் |
| வே. சந்திரன் | (தந்தை இல்லை 5பெண் சகோதரிகளுக்கும் 2 ஆண் சகோதரருக்கும் இவரே பொறுப்பு) |
| ப. வேலுப் பிள்ளை | 3 பெண் 5 ஆண் பிள்ளைகள் |
| ப. காசிப்பிள்ளை | 3 ஆண் 5 பெண் பிள்ளைகள் |
| ப. சுப்பிரமணியம் | திருமணம் ஆகி 2 மாதம் |
| ப. சிவஞானம் | இளைஞர், தகப்பன் இல்லை |
| ச. மோகன் | 5 பெண் பிள்ளைகள் |
| க. சிவபாதம் | இளைஞர் |
| ப. ரவிச்சந்திரன் | இளைஞர் |
| ந. நவரத்தினம் | இளைஞர் |
| வி. நடராசா | 1 பெண் பிள்ளை |
| சி. தனபாலசிங்கம் | 1 ஆண் பிள்ளை |
| சி. இராசலிங்கம் | இளைஞர் |
| கு. கெங்காதரன் | (பட்டுக்குடியிருப்பைச் சேர்ந்தவர் உறவினர் வீட்டுத் திருமணத்துக்காக ஒதியமலைக்கு வந்தவர்.) |
| பொ. தேவராசா | இளைஞர் |
| சி. இராசன் | சித்த சுவாதீனம் அற்றவர் |
| சி. இராசேந்திரன் | இளைஞர் |
| சி. க. சிதம்பரம் | 4 ஆண் 2 பெண் பிள்ளைகள் |
| எம். மணியம் | இளைஞர் |
| கோ. கணபதிப்பிள்ளை | 4 பெண் 3 ஆண் பிள்ளைகள் |
| கா. கணபதிப்பிள்ளை | 5 பெண்கள் 1 ஆண் பிள்ளை |
| ச. பொன்னம்பலம் | 5 பெண்கள் 1 ஆண் பிள்ளை |
| க. சின்னையா | 4 பெண்கள் 1 ஆண் பிள்ளை |



## கடல் நடுவே ஒரு களம்

கடல்களைத் தாண்டிக் கேட்கிறது
வீறிட்ட சிசுக் குரல்
காப்புடைந்த பெண்ணின் கதறல்
கனன்றெரியும் வீட்டின் குமுறல்
சமரசப் பேச்சின் அலங்கார வசீகரத்துக்குள்
எதிரெதிர் இனத்து மகனும் மகளும்
முகிழ்த்த வேளையில்
சிரசறுபட்டு அலறி விழும் ரணகளம்.
இனம் மொழி மதம் என்று
ஊர்வலம் எடுத்த
மூளையின் தாதுக்கள் மோதி
சங்கமம் நிறைந்து
சிக்கெடுத்தது முடிச்சு.
முடிச்சு இனி
வேதத்துக்கும் குர்ஆனுக்குமல்ல.
மூலதனத்துக்கும் பொறியியலுக்கும்.
அமைதியின் அநுஷ்டானங்களும்
ஆரவாரம் ஒடுங்கி ஸ்தம்பித்தன.
கல்லும் உருகி
அலையெடுக்கிறது.
எரிமலைப் பிழம்பு.
மரணம் மட்டுமே என்ற பின்
மரணம் தான் என்ன
அழிவது உடலின்
சுந்தர நிர்த்தத்துவம்
அழியாததுவோ உயிரின்
ஆரத்திச் சுடர்.

—நிருமின் சிவராம்



www.eelamview.com

www.eelamview.com

# நமீ



Swapo தலைவர் சாம் நுஜோமா.





மேலே, கீழே: Swapo கெரில்லாக்களுக்கு எதிராகப் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் தென்னாபிரிக்க ராணுவத்தினர் வலது: Swapo கெரில்லாக்கள்.

## நமீபிய தேசிய விடுதலைப் போராட்டம்

நமீபிய மக்களின் தேசிய சுதந்திரப் பிரச்சினை பற்றி ஆராய்வதற்கு புதுடில்லியில் சித்திரை மாதம் 16ந் திகதி ஒரு சர்வதேச மகாநாடு கூட்டப்படுகிறது. நான்கு நாட்கள் வரை தொடர்ந்து நடைபெற இருக்கும் இம்மாநாட்டில் அணிசேரா நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர். இம்மாநாட்டிற்கு இந்தியா தலைமை வகிக்கிறது.

தென் ஆபிரிக்க இனவெறி அரசின் ஒடுக்குமுறையை எதிர்த்து நமீபிய மக்கள் 30 ஆண்டுகளுக்கு மேலாகப் போராடி வருகிறார்கள். தேசிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இம்மக்களின் விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. 1966ம் ஆண்டில் ஆயுதப் போர் வடிவில் உயர்ச்சி கண்ட இப்போராட்டத்தை 'தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் இயக்கம்' என்ற விடுதலை அமைப்பு முன் நடத்தி வருகிறது.

நமீபிய மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டம் இன்று சர்வதேசப் பிரபல்யமடைந்து உலக சமுதாயத்தின் ஆதரவு பெற்று வருகிறது. இந்திய அரசு உட்பட பல உலக நாடுகள் இம்மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவளித்து வருகின்றன. ஆகவே, நமீபிய தேசிய சுதந்திரப் போராட்டம் பற்றி நாம் அறிந்திருப்பது அவசியம். இக்கட்டுரையில், நமீபிய மக்களின் போராட்டம் பற்றி சுருக்கமான வரலாற்றுக் குறிப்பையும் தற்போதைய நிலைமையையும் பற்றி விளக்கியிருக்கிறேன்.

### புவியியல் சூழல்......

ஆபிரிக்காவின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள நமீபியா அதன் எல்லைகளாக வடக்கே அங்கோலாவையும், தெற்கு எல்லையாக தென்னாபிரிக்காவையும், கிழக்கு எல்லையாக பொட்சுவானாவையும், வடகிழக்கு பொட்சுவானாவுக்கு மேலாக சாம்பியாவையும் மேற்கே கடலையும் எல்லைகளாகக் கொண்டது. நமீபியா தனது பெரும் பகுதியை வனாந்தரமாகக் கொண்டிருந்தாலும் இயற்கையின் கனிவளங்களாகிய இரத்தினக்கல் (Diamond) யூரேனியம் (Uranium) செம்பு (Copper) தகரம் (Tin) ஈயம் (Lead) போன்ற கனிவளங்களை கொண்டுள்ளது.

மூன்று லட்சத்துப் பதினெண்ணாயிரம் (3,18000) சதுர மைலை தனது பிரதேசமாகக் கொண்டு உள்ள நமீபியாவின் மக்கள் தொகை பதினான்கு (14) இலட்சமாகும். இங்கு வாழும் மக்களை இனக்குழுக்களாக (Tribes) வகைப்படுத்தலாம். இவர்களில் முக்கியமானவர்கள் ஒவோம்போ இன மக்கள், (Ovombo) டமாரா (Damara) இன மக்கள், நாமா (Nama) இன மக்கள், ஹெரேரோ (Herero) இன மக்கள், முக்கியமானவர்கள் காலனியாதிக்கத்திற்கு முன் விவசாயம், கால்நடை வளர்ப்பு, குடிசைத் தொழில் என்பன இம்மக்களின் பிரதான தொழில்களாக இருந்தன.

### அரசியல் கைமாறல்

முதலில் ஜேர்மனி 1890 ஆம் ஆண்டு நமீபியாவைக் கைப்பற்றி அடிமைப்படுத்தியது. ஜேர்மனிய அடக்கு முறைக்கெதிராக 1904, 1908-ஆம் ஆண்டுகளில் நமீபியக் கறுப்பின மக்கள் பெரும் போராட்டங்களை நடத்தினர். ஆனால் அப்போதைய ஜேர்மனிய மன்னன் கெய்சர் (Kaiser) பெரும் தொகையான ஜேர்மனியத் துருப்புக்களை அனுப்பி பல இலட்சம் நமீபிய மக்களைக் கொன்று இவ் எழுச்சிகளை அடக்கினான். இக்காலகட்டத்தில் தென் ஆபிரிக்காவை கைப்பற்றி ஆட்சி செய்த பிரிட்டன் நமீபியாவையும் தான் கைப்பற்றும் நோக்கத்தோடு தென் ஆப்பிரிக்கத் துருப்புக்களைப் பயன்படுத்தி 1915 ஆம் ஆண்டு நமீபியாவைத் தன்னுடன் பலவந்தமாக இணைத்துக் கொண்டது. முதலாம் உலக யுத்தத்தின் முடிவில் சர்வதேச சபையில் முக்கிய நாடுகளாக இருந்த அமெரிக்காவும், பிரிட்டனும "நமீபியாவை நிர்வகிக்கும் பொறுப்பை தென் ஆபிரிக்காவிடம் கொடுப்பதெனவும் சர்வதேச அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் நமீபியா இருக்குமெனவும்" பிரகடனம் செய்தன. வெள்ளை இனவெறி தென் ஆபிரிக்காவிடம் ஆட்சி ஒப்படைக்கப்பட்டதும் தென்னாபிரிக்காவுக்கே உரிய (Aparthied) "அப்பார்தெயிட்" இன ஒதுக்கல் கொள்கையை மிக மோசமான முறையில் நடைமுறைப் படுத்தியது. கறுப்பர்கள் வாழ்ந்து வந்த கனிவளப் பிரதேசங்களிலிருந்து நமீபிய மக்கள் பெயர்க்கப்பட்டு மக்கள் வாழமுடியாத ஒதுக்குப் புற சேரிகளில் குடியேற்றப்படுகின்றனர்.

தென் ஆபிரிக்க இன விரோத அரசு 1946ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் "நமீபியாவைத் தனது மாகாணமாக இணைத்தல் வேண்டுமென ஒரு கோரிக்கையை முன் வைத்தது. பல நாடுகளின் எதிர்ப்புக்களால் இத்தீர்மானம் நிராகரிக்கப்பட்டது இவ்வாறு நிராகரிக்கப்பட்ட பின்பும் தென்னாபிரிக்கா பலவந்தமாக நமீபியாவை தனது ஆறாவது மாகாணமாக இணைத்துக்கொண்டது.

### எழுச்சிப் போராட்டங்கள்...

தென்னாபிரிக்க அரசின் இன ஒதுக்கல் கொடுமைகளுக்கெதிராக நமீபிய மக்கள் தமது தேசிய விடுதலைப் போராட்டத்தை 1950ம் ஆண்டின் கடைசிக் காலகட்டத்தில் ஆரம்பித்தனர். விடுதலை இயக்கங்கள் (Ovombo) ஒவோம்போ பிரதேசங்களில் முதலில் தோற்றம் கண்டன. 1958ம் ஆண்டு ஒவோம்போ மக்கள் கழகம் (Ovombo Land People Organization) O.P.O. எனும் இயக்கமாக தோன்றியது. இவ்வியக்கம் சுரங்கத் தொழிலாளர், மாணவர், இளைஞர் என்போரை அதிகமாக கொண்டிருந்தது.

நமீபிய மக்களின் தேசிய விடுதலை தனித்த ஒரு பிரதேச மக்களின் போராட்டத்தினால் அடையமுடியாது என உணர்ந்த நமீபிய மக்கள் ஒன்று சேர்ந்து 1959ம் ஆண்டு மே மாதத்தில் தென்மேற்கு ஆபிரிக்க தேசிய முன்னணி (South West African National Union) ஒன்றை அமைத்தனர். தெ. ஆ. தே. முன்னணியும் ஒ. ம. கழகமும் தங்களுக்குள் எந்தவித வேறுபாடுகளும் இல்லாமல் இயங்கின. தொழிலாளர், மாணவர்கள், இளைஞர்கள் என்போரை அணி திரட்டி வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினர். நமீபிய மக்களின் இவ்வகையான சாத்வீக ஜனநாயகப் போராட்டங்களை தென்னாபிரிக்க அரசு மதிக்காதது மட்டுமல்ல. மிகப் பயங்கரமான முறையில் போராட்டங்களை ஒடுக்கியது.

இந்த ஒடுக்குமுறையிலிருந்து தாம் விடுதலை பெற சாத்வீகப் போராட்டங்கள் பயன் தரா என நமீபிய மக்கள் கருதத் தொடங்கினர். இதன் புறப்பாடாக 1960ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் இயக்கம் South West African Peoples Organaisation (SWAPO) தோற்றம் கண்டது. இதில் முன்னைய O.P.O. வில் அங்கம் வகித்த தலைவர்கள் பலரும் இடம் பெற்றனர்.


"சுவாப்போ" இயக்கத்தின் அரசியல் வேலைத் திட்டமானது நமீபியாவின் யதார்த்த புறநிலைகளுக்கு ஏற்றவாறு தெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. காலனிய ஒடுக்கு முறைக்கு எதிராக தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதோடு, சோசலிசப் புரட்சியையும் இலட்சியமாகக் கொண்டது இவ்வேலைத் திட்டம். 'சுவாப்போ' இயக்கத்தின் வேலைத் திட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கும் சில முக்கிய குறிக்கோள்கள் வருமாறு.

1. நமீபிய மக்களின் தேசிய சுதந்திரத்தை வென்றெடுத்து ஒரு ஜனநாயக மக்கள் குடியரசை நிறுவுதல்.
2. அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் உண்மையான, பரிபூரண சுதந்திரத்தை வென்றெடுப்பது.
3. தேசிய விடுதலைப் போராட்டத்தை கூர்மைப்படுத்தி, விரிவுபடுத்தும் நோக்கில் மக்கள் மத்தியில் தேசிய பற்றுணர்வையும் அரசியல் விழிப்புணர்வையும் தட்டி எழுப்புதல்.
4. தேசிய விடுதலைப் போராட்டத்தில் மக்களை நேரடிப் பங்களிப்புச் செய்யும் நோக்கில் பரந்துபட்ட

www.eelamview.com

www.eelamview.com

# பியா




வெகுசனத்தை அமைப்பு ரீதியாக அணி திரட்டுவது.

5. விஞ்ஞான சோசலிச தத்துவார்த்தக் கோட்பாட்டிற்கிணங்க வர்க்கமற்ற, சுரண்டலற்ற, ஒரு புதிய புரட்சிகர சமுதாயத்தைக் கட்டி எழுப்புதல். இந்த இலட்சியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் நோக்கில் தொழிலாள, விவசாய வர்க்கங்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் ஒரு முற்போக்கான, புரட்சிகர முன்னணித் தலைமையை உருவாக்குதல்.

(SWAPO Political Programme; 1976)

மேற்குறிப்பிட்ட அரசியல் இலட்சியங்களை தழுவிக்கொண்ட 'சுவாப்போ' இயக்கம் வெகுவிரைவில் வெகுசன ஆதரவு பெற்ற ஒரு தேசிய விடுதலை இயக்கமாக தன்னை நிறுவிக்கொண்டது. ஒரு தேசிய விடுதலை இயக்கமானது ஒரு அரசியற் கட்சியமைப்பிலிருந்து வேறுபட்ட தன்மைகளையும் இலட்சியங்களையும் கொண்டது. ஒரு அரசியற் கட்சியைப்போல ஒரு வர்க்கத்தினரையோ அல்லது சமூகத்தின் ஒரு பகுதியினரையோ அபிலாசைகளை மட்டும் பிரதிபலிக்காது. ஒரு விடுதலை இயக்கமானது பரந்துபட்ட வெகுசனத்தை ஒரு தேசிய சக்தியாக அணி திரட்டி ஒரு தேசிய போராட்டத்திற்கு தயார் செய்கிறது. ஒரு ஸ்திரமான, பலமான, கட்டுக்கோப்பான அமைப்பாகத் தன்னை நிறுவிக் கொண்ட சுவாப்போ இயக்கம், பரந்துபட்ட வெகுசனத்தை - ஆண் பெண், இளைஞர் முதியோர், தொழிலாளர் விவசாயிகள், மாணவர் புத்திஜீவிகள் - என்ற ரீதியில் நமீபிய சனத்தொகையில் சகல பகுதியினரையும் தேசிய விடுதலை என்ற இலட்சியத்தில் அணி திரட்டியது.

### ஆயுதப் போராட்டத்தில்...

பரந்துபட்ட வெகுசனத்தை அணிதிரட்டி ஒரு தேசிய இயக்கமாக தன்னை நிறுவிக்கொண்ட போதும், காலனித்துவ ஒடுக்குமுறையிலிருந்து விடுதலையை முன்னெடுப்பதாயின் அது ஆயுதப் போராட்டம் மூலமாகவே சாத்தியமாகும் என்பதை சுவாப்போ இயக்கம் உணர்ந்து கொண்டது. தென்னாபிரிக்க இனவாத அரசு மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் ஆயுத பலாத்கார ஒடுக்குமுறை மூலம் நமீபியமக்களை அடிமைகளாகமாற்றி நசுக்கி வந்தது. சாத்வீக, சமாதானப் போராட்டங்களை மிருகத்தனமாக ஒடுக்கிவந்தது. இந்தப் பலாத்கார ஒடுக்குமுறை இயந்திரத்தை புரட்சிகர ஆயுதப் போர் மூலமாகவே உடைத்தெறிய முடியும் என்பதில் தெளிவுகொண்ட சுவாப்போ இயக்கம் தனது இராணுவ அமைப்பாக நமீபிய மக்கள் விடுதலை இராணுவம் (People's Liberation Army of Namibia) — PLAN என்ற அமைப்பை உருவாக்கியது.

நீண்டகால கெரில்லாப் போர் முறையை தனது ஆயுதப் போராட்ட வடிவமாக தெரிந்து கொண்ட நமீபிய மக்கள் விடுதலை இராணுவம், ஆயுதப் போராட்டத்தை அரசியல் போராட்டத்தின் ஒரு விரிவாக்கமாக கைக்கொண்டது. சுவாப்போ விடுதலை வீரர்கள் ஆயுதம் தரித்த அரசியற் தொண்டர்களாக உருவாக்கப்பட்டனர். ஆயுதபாணிகளான இந்த அரசியற் போராளிகள் மக்களிடம் சென்று தமது விடுதலை இயக்கத்தின் இலட்சியத்தை எடுத்துரைத்து மக்கள் ஆதரவைத் திரட்டிவந்தனர். ஆயுதப் போராட்டம் மூலம் அரசியல் விடுதலை சாத்தியமாகும், அரசியல் விடுதலையே பொருளாதார விடிவிற்கு வழி கோலும் என்பதை மக்களுக்கு தெளிவாக எடுத்து விளக்கினர். இந்த அரசியற் பிரச்சாரம் காரணமாக ஆயுதப் போராட்டத்திற்கு மக்கள் மத்தியில் பெரும் ஆதரவு திரண்டது.


1966-ம் ஆண்டளவில் நமீபிய விடுதலைப் போராட்டம் ஆயுத வடிவப் போராட்டமாக உயர்ச்சியும் வளர்ச்சியும் கண்டது. முதலில் ஒவேம்போ பிரதேசத்தை நமீபிய கெரில்லா வீரர்கள் தமது பாதுகாப்புத் தளமாக அமைத்துக்கொண்டனர். ஆரம்பத்தில் இத் தளங்களிலிருந்து எதிரி ரோந்துப் படைகள் மீது சிறு அளவிலான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு போக்குவரத்து பாதைகள், தொழில் நிலையங்கள், பொருளாதார மையங்கள் போன்றவற்றை நாசவேலைகள் மூலம் அழிக்கத் தொடங்கினர். ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை கண்டு மிரண்ட தென்னாபிரிக்க இனவாத அரசு, ஒவேம்போ பிரதேசத்தில் மிகவும் காட்டுமிராண்டித்தனமான ஒடுக்குமுறையை கட்டவிழ்த்து விட்டது. பொதுமக்கள் பெரும் துன்பத்திற்கு இலக்காகப் பட்டனர். எனினும், ஆத்திரமடைந்த மக்கள் ஆயுதப் போராளிகளுக்கு போராதரவு அளிக்கத் தொடங்கினர். விவசாய மக்கள் ஆயிரக்கணக்கில் கெரில்லா அணிகளில் சேர்ந்துகொண்டனர். ஒடுக்குமுறை அதிகரிக்க, அதிகரிக்க ஆயுதப் போராட்டம் விரிவுபட்டு தீவிரமடையத் தொடங்கியது.

ஆரம்பகாலத்தில் நமீபிய கெரில்லாக்கள் பல துன்பங்களை இடையூறுகளை அனுபவிக்க நேர்ந்தது: சாம்பியாவில் தமது பயிற்சியை முடித்துக் கொண்ட கெரில்லாக்கள் 250 மைல் பிரதேசம் கொண்ட கெப்றிவ் (Caprive) பாலைவனப் பிரதேசத்தை கால் நடையாகக் கடந்து நமீபியாவுக்குள் வரவேண்டியிருந்தது. இந்த நீண்ட பாதயாத்திரையின்போது தென்னாபிரிக்க விமானத் தாக்குதல்களை இவர்கள் அடிக்கடி எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இத்தாக்குதல்களின்போது நூற்றுக்கணக்கில் கெரில்லாக்கள் கொல்லப்பட்டனர். அப்படியிருந்தும் இந்த நீண்ட பாலைவனப் பாதையூடாகவே பயிற்சிபெற்ற கெரில்லாக்கள் நமீபியா வந்தடைந்தனர்.

1974-ம் ஆண்டு போர்த்துக்கலிடம் இருந்து அங்கோலா, மொசாம்பிக், போன்ற நாடுகள் சுதந்திரம் பெற்றது. அங்கோலாவில் கியூபா, ருசிய உதவியுடன் சோசலிச அரசு ஒன்று உருவானது. இதனையடுத்து நமீபியக் கெரில்லாக்கள் அங்கோலாவை தமது தளமாகப் பயன்படுத்திக் கொண்டனர். பல கெரில்லாத் தளங்கள் அங்கோலாவில் அமைக்கப்பட்டதோடு சோசலிசமுகாம் நாடுகளிலிருந்து ஆயுத உதவிகளையும் சுவாப்போ இயக்கம் பெற்றுக்கொண்டது. நமீபிய மக்கள் விடுதலை இராணுவம் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டது. 1978-ம் ஆண்டளவில் சுவாப்போ இயக்கத்தில் பத்தாயிரம் (10,000) பயிற்சி பெற்ற கெரில்லாக்கள் இருந்தனர்.

1978-ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் சுவாப்போ விடுதலை இயக்கத்தை நசுக்கும் நோக்கத்தோடு தென்னாபிரிக்க அரசு (40,000) நாற்பதினாயிரம் துருப்புக்களை சுவாப்போவின் களமாகிய ஒவாம்போ பிரதேசத்திற்கு அனுப்பியது. தென்னாபிரிக்க கூலிப்படையினர் ஒவாம்போ பிரதேசத்தில் நுழைந்ததும் நமீபிய கெரில்லா அணி அங்கோலாவிற்குள் பின்வாங்கி சென்றது. கெரில்லாக்களை அழிக்க முடியாது தோல்விகண்ட தென்னாபிரிக்க இராணுவத்தினர் ஆயிரக்கணக்கில் அப்பாவி மக்களைக் கொன்று குவித்து இப்பிரதேசத்தில் பெரும் அழிவை ஏற்படுத்தினர்.

நமீபியக் கெரில்லாக்களின் தளங்கள் அங்கோலாவில் இயங்கி வந்தமை தென்னாபிரிக்காவுக்கு ஒரு சவாலாக விளங்கியது. இத்தளங்களை அழிக்க, தீர்மானித்த தென்னாபிரிக்க அரசு அங்கோலாமீது தொடர்ச்சியாக பல தாக்குதல்களை மேற்கொண்டது. 1980, 1981, 1982, 1983-ம் ஆண்டுகளில் தென்னாபிரிக்க அரசு திட்டமிட்ட அடிப்படையில் அங்கோலாவின் தென்மாகாணங்கள்மீது பாரிய தாக்குதல்களை மேற்கொண்டது. இத்தாக்குதல்களின்போது பல சுவாப்போ கெரில்லா தளங்கள் அழிக்கப்பட்டதுடன் ஆயிரக்கணக்கில் நமீபிய அகதிகளும் கொல்லப்பட்டனர். அத்தோடு அங்கோலாவில் உள்ள பொருளாதார நிலையங்களும் அழிக்கப்பட்டு பெரும் சீரழிவையும் ஏற்படுத்தியது.



வடக்கு நமீபியாவில் Swapo கூரவாளர்கள்.

அங்கோலாமீது தென்னாபிரிக்கா மேற்கொண்ட ஊடுருவல்களுக்கு பல்வேறு நாசகார நோக்கங்கள் உண்டு. இதிலொன்று அங்கோலாவின் சோசலிச அரசைக் கவிழ்ப்பது. அங்கோலாவில் ஒரு உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டு இருப்பதும் யூனிற்ற (Unita) எனப்படும் கெரில்லா இயக்கம் அரசுக்கெதிராக தென் அங்கோலாவில் போராட்டம் நடத்திவருவதும் தெரிந்ததே. இவ் அரசாங்க எதிர்ப்பு சக்திக்கு தென்னாபிரிக்கா மறைமுகமாக உதவி செய்து உள்நாட்டு யுத்தத்துக்கு தூபம் போட்டுவந்தது. அத்தோடு இந்த யூனிற்ற கெரில்லாக்களை சுவாப்போ இயக்கத்திற்கு எதிராகவும் இயங்கச் செய்தது. இவ்வித நாசகார நடவடிக்கைகளினூடு நமீபிய கெரில்லாக்களின் தளங்களை ஒழித்துக் கட்டுவதுடன் தனக்கு சாதகமான ஒரு அரசையும் அங்கோலாவில் நிறுவ முனைந்து நின்றது. அதுமாத்திரமின்றி அங்கோலாமீது தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி அந்நாட்டில் பெரும் பொருளாதார சீரழிவை ஏற்படுத்தியது. இப் பொருளாதார சீரழிவுகளையும் தொடர்ச்சியான எல்லை யுத்தத்தையும் தாக்குப்பிடிக்க முடியாத அங்கோலா தென்னாபிரிக்காவுடன் ஒரு உடன்பாடு செய்து கொள்ள முன்வந்தது. 1984 பெப்ரவரி மாதம் செய்து கொள்ளப்பட்ட இந்த உடன்பாட்டின் பிரகாரம் நமீபிய கெரில்லா தளங்களை தனது பிரதேசத்தில் நிறுவ அனுமதிப்பதில்லை என அங்கோலா இணங்கியதுடன் நமீபிய சுதந்திரத்துக்கான ஐ. நா. தாபனத்தின் தீர்மானத்தை நிறைவேற்றும்படியும் தென்னாபிரிக்காவிடம் கேட்டுக்கொண்டது.

இந்த உடன்பாட்டின் பிரகாரம் நமீபிய கெரில்லாத் தளங்கள் அங்கோலாவில் இருந்து அகற்றப்பட்டன. சுவாப்போ விடுதலை வீரர்கள் தங்களது கெரில்லாத் தளங்களை மீண்டும் தமது தாய்ப் பூமியில் அமைத்துக்கொண்டனர். அதே வேளை தென்னாபிரிக்க இனவாத அரசு நமீபியாவுக்கு பரிபூரண சுதந்திரம் வழங்கும் ஐ. நா. சபையின் தீர்மானத்தை தட்டிக் கழித்துவருகிறது. அங்கோலாவிலுள்ள கியூப துருப்புகள் வாபஸ் பெறப்படவேண்டுமெனவும் யூனிற்ற "கெரில்லா" இயக்கத் தலைவர் யோசப் சவிம்பி(Joseph Savimbi)க்கு அங்கோலா அரசில் முக்கிய அந்தஸ்து கொடுக்கப் படவேண்டுமெனவும் நிபந்தனைகளைப் போட்டு தென்னாபிரிக்கா நமீபிய சுதந்திரத்தை ஒத்திப் போட்டு வருகிறது.

நிலைமை இவ்வாறு இருக்க நமீபிய மக்களின் தேசிய சுதந்திரத்துக்கு சர்வதேச ரீதியில் ஆதரவு திரண்டு வருகிறது. 1966ம் ஆண்டிலிருந்தே நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்கவேண்டுமென ஐ. நா. ஸ்தாபனம் வற்புறுத்தி வருகிறது. நமீபிய மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை சோசலிச உலகம் மூன்றாவது உலக நாடுகளும் அங்கீகரித்துள்ளன. நமீபிய மக்களுக்கு சுதந்திரம் வழங்குமாறு முழு உலகமுமே எதிர்த்துக் குரல் எழுப்பி வந்தபோதும் இனவெறி பிடித்த தென்னாபிரிக்க அரசு உலக மனச்சாட்சிக்கு விரோதமாக தொடர்ந்து தனது ஒடுக்குமுறைக் கொள்கையை கடைப்பிடித்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில்தான் இம் மாதம் புதுடெல்லியில் நமீபிய தேசிய பிரச்சினை பற்றிய உலக மகாநாடு கூடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.




நமீபியப் புரட்சியில் ஆண்களுடன் பெண்களும் இணைந்து போராடுகிறார்கள்.



www.eelamview.com

www.eelamview.com






# பிறந்த மண்




# ணிலிருந்து



சிங்கள அரச பயங்கர வாதப் பூகம்பத்தால் தமது சொந்த மண்ணிலிருந்து இடம் பெயர்ந்து, அநாதரவாக அகதிகளாக ஆயிரமாயிரம் தமிழ் மக்கள் தமிழகத்தில் தஞ்சம் புகுந்து வருகின்றனர். இலங்கை அரசின் இனப் படுகொலைத் திட்டத்தின் எதிரொலியாகவே இந்த வெகுசனக் குடிபெயர்வு இடம் பெற்றுவருகிறது. இந்த துன்பியல் நாடகத்தின் கதா பாத்திரங்களையே இந்தப் புகைப்படங்கள் சித்தரிக்கின்றன. மன்னார் மாவட்ட கரையோரக் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்துவரும் இம்மக்களுக்கு தமிழகம் தற்காலிகமாக தஞ்சம் கொடுக்கிறது. சுதந்திரத் தமிழீழத்தில், பாதுகாப்பாக, பயமின்றி வாழும் நன்னாளையே இம்மக்கள் எதிர்பார்த்து ஏங்கியபடி இருக்கின்றனர். அந்த ஒளிமயமான எதிர்காலத்தை படைத்துக் கொடுக்கும் பொறுப்பு இன்றைய புரட்சிகர இளம் போராளிகளுடையதாகும்.







# விரட்டப்பட்ட எம் மக்கள்

www.eelamview.com

www.eelamview.com

# உண்மைகள் உறங்குவதில்லை

இன்று தமிழீழத் தேசிய இனம் ஒரு வரலாற்று நெருக்கடியை எதிர்நோக்கி நிற்கிறது. அரச பயங்கரவாத ஒடுக்குமுறை கூர்மையடைந்து எமது மக்கள் இன அழிவின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒரு இன யுத்தமாகத் திசைதிருப்ப சிங்கள அரசு முனைந்து வருகிறது.

இந்த ஆபத்தான, இக்கட்டான சூழ்நிலையில் விடுதலைப் போராளிகள் மத்தியில் பிணக்குகள், பிளவுகள் நீங்கி, புரிந்துணர்வு தோன்றி, ஒருமைப்பாடு உருவாகுவதையே தமிழீழ மக்கள் விரும்புகிறார்கள். உலகெங்குமுள்ள தமிழீழத் தேசாபிமானிகளது அபிலாசையும் இதுவே.

இந்த ஒற்றுமைக்கான தேவையையும், அவசியத்தையும் அதன் வரலாற்று நிர்ப்பந்தத்தையும் நாம் நன்கு உணர்வோம். பழையதும் பலம்வாய்ந்ததும், புரட்சிகர ஆயுதப் போராட்டத்தில் முன்னணி வகிப்பதுமான விடுதலை இயக்கம் என்ற ரீதியில் ஏனைய விடுதலை அமைப்புகளை அரவணைத்துச் செல்வது எமது கடமை என்பதையும் நாம் உணராமல் இல்லை. இந்த விழிப்புணர்வின் அடிப்படையில் நாம் ஒற்றுமையை விரும்பினோம். இலட்சியப் பாதையிலிருந்து வழுவாத, உண்மையான, நேர்மையான, அரசியல் சந்தர்ப்பவாதமற்ற ஒருமைப்பாட்டை கட்டி எழுப்புவதே எமது நோக்கம். பிரச்சாரத்திற்காகவோ, அரசியல் இலாபம் கருதியோ, மக்களை ஏமாற்றவோ நாம் ஒற்றுமை வேதாந்தம் பேசவில்லை. அப்படியான சூத்திரதார அரசியல் வேடங்கள்போடும் அவசியம் எமக்கு இருக்கவில்லை.

ஆகவே ஒற்றுமை விசயத்தில் நாம் அவசரப்படாமல், நிதானமாக, பொறுமையாக அடியெடுத்துவைத்தோம். முதலில், களத்தில் போராடும் புரட்சிகர அமைப்புகள் ஒன்றுபட வேண்டியதன் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்துகொண்டோம். அதன் பிரகாரம் அந்த அமைப்புகளோடு பேச்சுக்களை நடத்தி, அவர்களோடு ஒன்றுபட்டு செயற்படுவதென முடிவெடுத்திருக்கிறோம். இது மக்களுக்கு மகிழ்ச்சிதரும் விசயம். இதுபற்றி விரைவில் பொதுமக்களுக்கு ஒரு பகிரங்க அறிக்கையை வெளியிடவிருக்கிறோம்.

விடுதலை அமைப்புகள் மத்தியில் இந்த நல்லெண்ண சூழ்நிலை உருவாகிவரும் இந்த சந்தர்ப்பத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் மட்டும் எமது இயக்கத்தோடும் ஏனைய சில அமைப்புகளோடும் முரண்பட்டு நிற்கிறது. இவர்களது பிரச்சினைதான் என்ன? ஏன் இப்படி இவர்கள் முரண்பாடுகளையும், பகைமையையும் வளர்த்துச் செல்கிறார்கள்? உதட்டளவில் ஒற்றுமைக் கீதம் பாடிக்கொண்டு, செயல்களில் வேற்றுமையை விதைத்து வருவதன் காரணம் தான் என்ன?

> ....ஏனைய விடுதலை அமைப்புகளை அரவணைத்துச் செல்வது எமது கடமை என்பதையும் நாம் உணராமல் இல்லை....

இன்றைய சூழ்நிலையில் எந்தவொரு விடுதலை அமைப்புடனும் பகைமையையும் முரண்பாட்டையும் வளர்த்துக்கொள்வது எமது நோக்கமல்ல. எமது மக்களும் இதனை விரும்பப்போவதில்லை. ஆனால் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எம்மீது கட்டவிழ்த்துவிடும் அபாண்டமான, அநியாயமான பொய்ப் பிரச்சாரத்திற்கு நாம் பதிலளிக்கத் தவறினால் பொய்மைக்கும், புரளிக்கும், சூழ்ச்சிக்கும் இடமளித்த பழி எம்மீது சாரும். ஆகவே நாம் இவர்களது நட்டாமுட்டித்தனமான நடவடிக்கைகளையும், அவற்றை மூடி மறைக்க இவர்கள் கட்டவிழ்த்துவரும் விசமப் பிரச்சாரத்தையும் அம்பலப்படுத்துவது தவிர்க்க முடியாததாகிறது. உண்மையை நாம் மக்களுக்கு எடுத்துச் சொல்வது எமது கடமை. உண்மைக்கும் நேர்மைக்கும் மக்கள் மதிப்பளிப்பார்கள் என்பது எமது நம்பிக்கை.

விடுதலைப் புலிகளுக்கும், த.ம.வி. கழகத்திற்கும் இடையிலான முரண்பாடு நீண்ட வரலாற்றைக் கொண்டது. கழகத்தின தலைவர் உமாமகேஸ்வரன் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை எமது இயக்கத்தைப் பற்றியும், எமது தலைவர் பிரபாகரன் பற்றியும் மிகவும் மோசமான, மிகவும் விசமத்தனமான, மிகவும் கீழ்த்தரமான பிரச்சாரத்தை கட்டவிழ்த்து வருவது யாவரும் அறிந்ததே. பொய்ப் பிரச்சாரம் மட்டுமல்லாது காடைத்தனமும், துரோகத்தனமும், கொலைச் சதிகளும் இவர்களது அரசியலை கறைபடியச் செய்தது. இவர்களது இந்த நீண்ட, துரோகத்தனமான, நாசகார அரசியல் வரலாற்றை எடுத்துரைப்பது எமது நோக்கமல்ல. சமீபகாலமாக நிகழ்ந்த சில சம்பவங்களை மட்டும் இங்கு நாம் விளக்கினால் போதும். அதிலிருந்து இவர்களை இனம் கண்டுகொள்ள முடியும்.

பல மாதங்களுக்கு முன்பு உமாமகேஸ்வரன் ஒரு பிரச்சாரக் குண்டை வெடித்தார். பிரபாகரனுடன் பேசத் தயாராக இருப்பதாகவும், புலிகளுடன் ஒன்றுபட்டு இயங்க விரும்புவதாகவும் பத்திரிகைகளுக்குப் பகிரங்க அறிக்கை விடுத்தார்.

கழகத்தினர் பிரச்சாரத்தில் சாமர்த்தியசாலிகள். பிரச்சார சாதனத்தின் வலிமையை நன்கு அறிந்தவர்கள். போராட்டத்தினூடாக மக்களை கவர்வதைவிட பிரச்சாரத்தால் மக்களை வென்றுவிடலாம் எனக் கருதுபவர்கள். அதனால் தான் போராட்டத்திலிருந்து விலகி பிரச்சார அமைப்புகளை பலப்படுத்தி வருகிறார்கள். சொற்களால் மக்களுக்கு செப்படி வித்தை காட்டலாம் என எண்ணுகிறார்கள் போலும்.

உமாவின் அறிக்கை மக்களை ஈர்த்ததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. எமக்கு சங்கடமான நிலையை உருவாக்குவது அவர்களது நோக்கமாக இருந்தது. ஆனால் நாம் உண்மையில் ஒற்றுமையை விரும்பினோம். ஆகவே உமாவின் அழைப்பை நாம் நிராகரிக்கவில்லை.

உமாவை சந்தித்துப் பேசி ஒற்றுமை பற்றி எமது நிலைப்பாட்டை விளக்க எமது பிரதிநிதி ஒருவரை அனுப்பிவைத்தோம்.

ஒற்றுமைக்கு முதற்படியாக ஒற்றுமைக்கான நல்லெண்ண, நட்புறவுச் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். இதற்கு வழியாக ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுவதையோ, விசமத்தனமாக விமர்சிப்பதையோ நிறுத்திவிட வேண்டும். முரண்பாட்டையும் பகைமையையும் வளர்க்கும் சகல நடவடிக்கைகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும். இவ்விதமான நட்புறவு சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டதன்பின் எந்த அடிப்படையில் ஒன்றுபட்டு இயங்குவது என்பது பற்றி பேசி ஒரு முடிவுக்கு வரலாம். இவ்வாறு எமது நிலைப்பாட்டை த.ம.வி. கழகத் தலைமைக்கு எடுத்து விளக்கினோம். இதற்கு அவர்கள் இணங்கினார்கள்.

ஆனால் நடந்ததுதான் என்ன?

எமது இயக்கத்திற்கு எதிராகப் படுமோசமான விசமப்பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டதுடன் எமது இயக்க உறுப்பினர் மீது காட்டுமிராண்டித்தனமான காடைத்தனமும் கட்டவிழ்த்துவிடப்பட்டது. ஆத்திரமூட்டும் இச் சம்பவங்களை காலவரை அடிப்படையில் பட்டியில் போட்டுக் காட்டலாம்.

20-11-84ல் மட்டக்களப்பு மாவட்டத்திற்குப் பொறுப்பானவரும், எமது இயக்க முன்னணித் தளபதிகளில் ஒருவருமான 'பசீர் காக்கா' என்பவரை த.ம.வி. கழகத்தினர் சிங்கள இராணுவ சீருடை அணிந்து வந்து கடத்திச் செல்ல முயன்றனர். சிங்கள இராணுவத்தினரால்பிடித்துச் செல்லப்பட்டார் என்ற மாயையை உருவாக்கி பசீரை கொலை செய்ய முயன்ற நயவஞ்சகமான செயல் இதுவாகும்.

25-11-84ல் தேசிய விடுதலைப் போரில் முதலில் உயிர்த் தியாகம் செய்த மாவீரன் சங்கரின் இரண்டாவது நினைவாண்டு நாளைக் குறிக்கும் சுவரொட்டிகளை சுழிபுரத்தில் ஒட்டச் சென்ற எமது ஆறு இளம் புலிகளை த.ம.வி. கழகக் காடையர்கள் கைது செய்து, சித்திரவதை செய்து, கண்டதுண்டமாக வெட்டி, கோரமாகக் கொலை செய்து புதைத்தனர். இந்தக் கோரத்தை நேரில் கண்ட இரு சுழிபுர இளைஞர்களும் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர். கழகத்தினரின் இந்தக் கூட்டுக் கொலைகள் யாழ் மக்களை திகைப்பில் ஆழ்த்தியது. இந்தக் கொலைகாரப் பாதகர்கள் யார் என்பதை மக்கள் இனம் கண்டுகொண்டதால் நாம் பழிதீர்க்கும் நடவடிக்கையில் இறங்கவில்லை. மக்களே தீர்ப்பளிக்கட்டும் என்று பெருந்தன்மையோடு விட்டுவிட்டோம்.

6-12-84ல் மதுரையில் ஓரிடத்தில் குளிக்கச் சென்ற எமது இயக்க உறுப்பினர் சிலரை கழகத்தினர் ஆயுத முனையில் மூர்க்கமாகத்தாக்கியதோடு சுழிபுரக் கொலைகளை நினைவூட்டி மிரட்டினர்.

1-1-85ல் மதுரையில் எமது மருத்துவத்துறைப் பொறுப்பாளரும், இயக்கத்தின் மூத்த உறுப்பினருமான உதயகுமார் என்பவரை கழகத்தினர் வஞ்சகமாகக் கடத்த முயன்றனர்.

14-1-85ல் எமது இயக்க அங்கத்தவர் குணம் என்பவர் தஞ்சாவூரில் பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்தபோது கழகத்தினரால் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டார். கழகத்தின் முகாமிற்கு கொண்டு செல்லப்பட்ட அவர் மிகக் கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டார். அவரிடமிருந்து எமது தலைவர் பிரபாகரனை கொலை செய்வதற்கு தேவையான விபரங்களைப் பெற முயன்றனர். (பிரபாகரனின் இருப்பிடம், மோட்டார் வாகன இலக்கம், மெய்ப்பாதுகாவலர், ஆயுதங்கள் பற்றிய விபரங்கள்.)

15-2-85ல் எமது இயக்க ஆதரவாளர் ஆதவன் என்பவரை கழக உறுப்பினர் கடத்திச் புலிகளோடு சென்று சென்னையிலுள்ள கூட்டணி உறுப்பினர் ஆனந்தசங்கர் (முன்னாள் பா.உ.) வீட்டில் வைத்து சித்திரவதை செய்து சுழிபுரத்தில் ஆறு பேரை த.ம.வி. கழகத்தினர் கொலை செய்தது புலிகளின் தப்பான பிரச்சாரம் என்ற ரீதியில் அவரிடம் நிர்ப்பந்தமாக, பயமுறுத்தி கடிதம் எழுதி வாங்கினர்.

5-3-85ல் எமது மூத்த இயக்க உறுப்பினரான பொட்டு என்பவரையும் மற்றொரு உறுப்பினரையும் த.ம.வி. கழகத்தினர் முத்துப்பேட்டையில் வைத்து ஆயுத முனையில் கைது செய்து பலாத்காரமாக தமது முகாமுக்கு கடத்திச் சென்றனர்.

> ....எமது சகோதரர்களோடு சண்டையிடுவது எதிரிக்கு மட்டுமே சாதகமாக அமையும் என்பது எமக்குத் தெரியாததல்ல....

அங்கு அவர் மிரட்டப்பட்டு அவமானப் படுத்தப்பட்டார். அவரது கைத் துப்பாக்கியும் பறித்தெடுக்கப்பட்டது.

இப்படியான காடைத்தனத்தையும் காட்டுமிராண்டித்தனத்தையும் எத்தனை காலத்திற்கு நாம் சகித்துக்கொண்டிருப்பது. எமது பொறுமைக்கும் பெருந்தன்மைக்கும் ஒரு வரம்பு இருக்கத்தான் செய்கிறது. எம்மை சதா ஆத்திரமூட்டி, அவமானப்படுத்தி, சண்டைக்கு இழுப்பதன் அந்தரங்க நோக்கம்தான் என்ன? ஒற்றுமைக்கான நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்குவது இவ்விதம்தானா? புரட்சி இயக்கம், மக்கள் இயக்கம், சோசலிச தர்மம் என்றெல்லாம் தம்பட்டமடித்துக்கொண்டு சகோதர புரட்சிவாதிகளை கொலை செய்தும், சித்திரவதை செய்தும், கொடுமைப்படுத்தியும் காட்டு விலங்காண்டித்தனமாக நடந்துகொள்ளும் இந்தக் கும்பலின் நோக்கம் தான் என்ன? எமது இயக்கத்தோடு மட்டுமல்லாது வேறு சில விடுதலை அமைப்புகளோடும் இவர்கள் தமது காடைத்தனத்தைக் காட்டத் தவறவில்லை. சுழிபுரம் படுகொலைகளை ஒரு விடுதலை அமைப்பு பலமாகக் கண்டித்தது. கழகத்தினர் பொது மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தது. இதனைப் பொறுத்துக் கொள்ளமுடியாத இந்த சண்டியர் கோஷ்டி அந்த அமைப்பு உறுப்பினர்களை கடத்தியும், கொலை செய்தும், மிரட்டியும் கொடுமைகளைப் புரிந்து வருகின்றனர்.

சுழிபுரம் கொலைகள் கழகத்திற்கு உள்ளேயும் ஒரு பூகம்பத்தைக் கிளப்பியது. இந்தக் கொலைகள் மிகவும் அநியாயமான, மிருகத்தனமான செயல் என்பதை த.ம.வி. கழக உறுப்பினர் சிலர் விமர்சித்தனர். இப்படியாக நியாயம் கேட்க கிளம்பிய சில இளம் போராளிகள் மாயமாக மறையத் தொடங்கினர். சுழிபுரத்தில் இளம் புலிகளுக்கு நடந்த கதிதான் இவர்களுக்கு தமிழ் நாட்டில் நடந்திருக்கிறது.

கழகத்தின் காடைத்தனம் தமிழீழ விடுதலைப் போராளிகளோடு மட்டும் நின்றுவிடாது. தமிழ்நாட்டில் தமிழக மக்களையும் தீண்டத் தொடங்கியுள்ளது. இதன் விளைவாக உமாமகேஸ்வரனுக்கும் அவரது சகாக்களுக்கும் எதிராக காவல் துறையினரால் மூன்று வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கிறது.


நாம் களத்தில் சிங்கள ஆயுதப் படைகளை எதிர்த்துப் போராடி



க. யோகீஸ்வரன்




சி. சிவராசா




சிவானந்தன்



சுழிபுரம். த. ம. வி. க. வெறிச் செயலுக்கு பலியான எமது போராளிகள்.



த. புவீந்திரன்



வி. தேவநாதன்



சி. சிவகுமாரன்

www.eelamview.com

www.eelamview.com

வருகிறோம். எமது சிந்தனையும் செயலும் எதிரியை சமாளிப்பதில் செலவாகி வருகிறது. ஏனைய அமைப்புகளும் களத்தில் குதித்துள்ளன. கழகத்தினர் மட்டும் போராட்ட களத்தில் இறங்க மறுத்துக்கொண்டு போராட்டத்தைப் பின்போட்டுக் கொண்டு, போராடும் இயக்கங்களோடு போர் தொடுத்து நிற்கின்றனர். இவர்களது சக்தியெல்லாம் சகோதர யுத்தத்தில், உடன்பிறப்புக் கொலைகளில் செலவாகிறது.

நாம் சகோதர யுத்தத்தை விரும்பவில்லை. எமது சகோதரர்களோடு சண்டையிடுவது எதிரிக்கு மட்டுமே சாதகமாக அமையும் என்பது எமக்குத் தெரியாததல்ல. ஆனால் அதே சமயம், கழகத்தினரின் காடைத்தனத்திற்கு இடமளித்து, குட்டக் குட்டப் பொறுத்துக்கொள்ளும் முட்டாள்களாக முடங்கிக்கிடக்கவும் நாம் தயாராக இல்லை. கழகத்தினரின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். அல்லது போனால் எமது விடுதலைப் போராட்டம் இயக்கங்களின் உட்போராட்டமாக வெடிக்கும் ஆபத்தை தடுக்க முடியாது. எனவே நாம் கழகத்தின்மீது ஒரு எச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானித்தோம்.

கடந்த 7-3-85ல் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் படைத் துறைச் செயலர் என்ற பொறுப்பிலுள்ள கண்ணன் (யோதீஸ்வரன்) என்பவர் எமது இயக்கப் போராளிகளால் கைது செய்யப்பட்டார். அவருக்கு துணையாக விருந்த மெய்ப்பாது காவலர்கள் தப்பியோடி மறைந்தனர். இச்சம்பவம் பகிரங்கமாக சென்னை, தமிழர் செய்தி நிலையத்தில் நடைபெற்றது. இந்தத் தவிர்க்கமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு எம்மை ஆளாக்கிய பொறுப்பு கழகத்தினரையே சாரும்.

**....உண்மையான சகோதரத்துவ ஒருமைப்பாட்டிற்கு வழிகோல வேண்டும் என்பதே எமது ஆவல்....**

இயக்கத்தின் 'இராணுவத் தளபதி' என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டு, 'இராணுவ நடவடிக்கைகள்' என்ற போர்வையில் சகோதரக் கொலைகளுக்கும், காடைத்தனத்திற்கும் பொறுப்பாக இயங்கியவர்களில் ஒருவர்தான் கண்ணன். இவர் முன்னர் எமது இயக்கத்தில் இருந்து இயக்கத்திற்கு துரோகம் செய்து, இயக்க ஆயுதங்களைக் களவாடி, சொத்துக்களைச் சூறையாடி இயக்கத்தை விட்டு ஓடி ஒளிந்தவர் என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

இவரை நாம் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தினோம். கழகத்தின் காடைத்தனம் இனி மேலும் தொடருமானால் அதனால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பேற்கவேண்டும் என கண்ணனுக்கு நாம் கடும் எச்சரிக்கை செய்தோம். எம்மால் அறிவுறுத்தப்பட்ட அவர் பின்பு விடுவிக்கப்பட்டார்.

இது ஒரு இறுதி எச்சரிக்கை நடவடிக்கையாகும். நெருப்போடு விளையாடுவது ஆபத்தானது என்பதை உணர்த்துவதற்காகவே இந்த நடவடிக்கையை மேற்கொள்ள நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். நாம் சக போராளிகளோடு முரண்பாட்டை வளர்த்து, மோதலில் இறங்க விரும்பவில்லை. ஆனால் வீம்புக்கும் வீண் சண்டைக்கும் இழுப்பவர்களை நாம் பொறுத்துக்கொள்ளவும் போவதில்லை. கழகத்தினர் இனியாவது தமது தான்தோன்றித்தனமான போக்கை கைவிட்டு விடுதலை அமைப்புகளோடு அன்புறவை ஏற்படுத்தி, புரிந்துணர்வை வளர்த்து, உண்மையான சகோதரத்துவ ஒருமைப்பாட்டிற்கு வழிகோல வேண்டும் என்பதே எமது ஆவல். இதுவே எமது உண்மையான நிலை. உண்மைக்கும், நேர்மைக்கும், தர்மத்திற்கும் தமிழீழ மக்கள் என்றும் ஆதரவளிப்பார்கள் என்பது எமது நம்பிக்கை.

# சிங்களச் சிங்கமும்

தென்னை மரங்களால் சூழப்பட்டு இருக்கும் விமான இறங்கு தளத்தில் ஒரு விமானம் வந்து நிற்கிறது. விமானத்திலிருந்து இறங்கிய ஒரு பயணி கொழும்புக்குப் பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனத்தில் இருந்த வழிகாட்டியிடம் சென்ற ஆண்டு எனது பயணத்தை ஏற்பாடு செய்திருந்த நிறுவனத்தின் ஆலோசனைக் கிணங்க என் பயணத்தை இரத்துச் செய்தேன். இந்த வருடம் நிலைமை எப்படி? பிரச்சனைகள் எல்லாம் தீர்ந்து விட்டனவா? என வினவினேன். புன்னகையால் அவன் முகம் மலர "ஆமாம், நாங்கள் பழி தீர்த்துக்கொண்டோம்" என்றான். அவனது பதிலால் திகைப்படைந்திருந்த வெளிநாட்டு பயணிகளிடம் "தமிழர்கள் எங்கள் இராணுவ வீரர்களைக் கொல்கிறார்கள், நாங்கள் பதிலுக்கு தமிழர்களைக் கொல்லுகிறோம்" எனக் கூறினான். இந்த சொர்க்க பூமிக்கு வருகை தந்த மார்க்கோ போலோ இச்சிறிய தீவை "சைலோன்" என அழைத்தான்.

## Le Monde

பாஸ்கல் செபே-2312-84-லே மோண்ட்(பிரெஞ்ச் தினசரி)

1972-ம் ஆண்டு புதிய அரசியல் அமைப்பின் பிரகாரம் இலங்கை ஸ்ரீலங்காவென பெயர் மாற்றப்பட்டது. பல ஆண்டுகள் கழித்த பின்னும் சிறிதுமே தணியாத ஒரு நெருக்கடி இத்தீவை வாட்டிக்கொண்டு இருக்கிறது. பரஸ்பர குரோதத்துடன் இங்கு இரு தேசிய சமூகங்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன.

தமிழீழ விடுதலைக்காக பல தலைமறைவு இயக்கங்கள் போராடிக் கொண்டு இருக்கின்றன. ஒரு காலத்தில் ஆயுதப் போராட்டத்தை விமர்சித்த பல அமைப்புக்கள் தமது கோரிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை என்ற நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டதும் ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்கத் தொடங்கின. தமிழ் மக்கள் ஐக்கியப்பட்டு அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு 1983 யூலை கலவரம் உறுதுணை புரிந்து உள்ளது. ஆனால் சேர்ந்து இயங்குவதிலும் ஒன்றுபட்டு போராடுவதிலும் போராட்ட இயக்கங்களுக்கிடையே சரியான ஒற்றுமை இல்லை.

எந்த விடுதலை இயக்கத்திற்கு பாத்துபட்ட மக்கள். ஆதரவு உள்ளது என்பதை திட்டவட்டமாக வரையறுத்து சொல்ல முடியாது போனாலும் விடுதலைப் புலிகளின் சமீபத்திய கெரில்லாத் தாக்குதல்களின் வெற்றிகளைப் பார்க்கும்போது **இந்த இயக்கம்தான் மிகவும் செயல் திறன் மிக்கதாகவும், செம்மையான முறையில் தாபனமயப் படுத்தப்பட்டதாகவும் விளங்குகிறது.**

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 1972ம் ஆண்டு வே. பிரபாகரனின் தலைமையின் தமிழீழ புரட்சிகர இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இது ஸ்ரீலங்கா அரசினால் தடை செய்யப்பட்ட இயக்கமாகும்.

பண்டைய தமிழர்களின் வீர வரலாற்றைச் சித்தரிக்கும் குறியீடான புலியை தமது அமைப்பு சின்னமாக இவர்கள் வரித்துக் கொண்டுள்ளனர். விடுதலைப் போராட்டமானது சிங்கள அரசினை உருவகப்படுத்தும் சிங்கத்திற்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகளால் நடத்துகின்ற புலி-சிங்க யுத்தமாக மாறியுள்ளது. ஒரு விடுதலைப் புலி என்னைச் சந்தித்தபோது "எமது போராட்டம் மாக்சிச புரட்சிகர சித்தாந்தத்தால் நெறிப்படுத்தப்பட்டது. நாம் இந்தியாவின் நண்பர்கள். அதே வேளை சிங்கள அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தளமாக விளங்குகிறது. சீனாவின் உதவியையும் பெற்று வருகிறது. நாம் உருவாக்க இருக்கும் தமிழீழம் ஒரு சோசலிச அரசாக விளங்கும். இங்கு மனித உரிமைகளுக்கும் தனி மனித சுதந்திரத்துக்கும் உத்தரவாதம் அளிக்கப்படும்" எனக் கூறினார்.

இராணுவத்துக்கெதிராக நடத்தப்படும் தாக்குதல்களின்போது கைப்பற்றப்படும் ஆயுதங்கள், இராணுவ, பொலிஸ் நிலையங்களை முற்றுகை இட்டு பெறப்படும் ஆயுதங்களையும் கொண்டே விடுதலைப் புலிகள் தமது இராணுவ அணியைப் பலப்படுத்தி வருகின்றனர். மேலும் பல விடயங்களைத் தெரிந்துகொள்ள நான் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை.

நீங்கள் எந்த நாடுகளில் இருந்து உதவி பெறுகிறீர்கள் என்று நான் கேட்டபோது இதை வெளிப்படுத்துவது அபாயகரமானது என்றார்கள். வடபகுதி மக்கள் அனைவரும் சிங்கள இராணுவம் திரும்பி செல்லவேண்டும் என்று விரும்புகின்றனர். சிங்கள இராணுவம் எமது இராணுவம் அல்ல. அது எம்மைக் கொல்கிறது என ஒரு விடுதலைப் புலி உணர்ச்சியுடன் கூறினான்.

புலிகள் சிங்கள இராணுவம்மீது நடத்தும் தாக்குதல்களுக்குப் பதிலாக இராணுவம் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்துப் பழி தீர்த்துக்கொள்கிறது. இத்தகைய புலிகளின் தாக்குதலும் இராணுவத்தின் பழி தீர்த்தலும ஒரு விசச்சக்கர சுழலாக அமைந்து விட்டது. விடுதலைப் போராட்ட கெரில்லா ஒருவனிடம் இது பற்றிக் கேட்டபோது "இராணுவம் இங்கு இருக்கும்வரை நாங்கள் இராணுவ வீரர்களைக் கொல்லத்தான் செய்வோம்" என்றான். இதற்கு ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியிடம் கேட்டபோது "அங்கு தொல்லைகள் இருக்கும்வரை இராணுவம் இருக்கத்தான் செய்யும்" என்றான்.



தமிழ் மக்கள் தமது பிரதேச, மத வேறுபாடுகளை மறந்து இலட்சியத்திற்காக உறுதியாக ஐக்கியப்பட்டு நிற்கின்றனர். துக்க தினம் அனுஷ்டித்தல், பாடசாலை பகிஷ்கரிப்பு, கடையடைப்பு, வேலை நிறுத்தம் போன்றவற்றை இவர்கள் மேற்கொள்ள புலிகளோ இராணுவத்துக்கெதிரான தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். யாழ் நகர பிரசைகள் குழு மூன்று மாத காலத்துக்குள் இராணுவத்தைத் திரும்பப் பெறுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து இருந்தும் எந்தவித பலனும் ஏற்படவில்லை. யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையே நடக்கும் உரையாடல் செவிடர்களுக்கிடையே நடக்கும் உரையாடல் போல் உள்ளது.

இலங்கைத் தீவின் தமிழர் பிரதேசமாகிய வடபகுதிக்குச் செல்ல எந்தவொரு பயணியும் துணிவதில்லை. இராஜதந்திர அதிகாரிகள் வடபகுதியை தவிர்த்துக் கொண்டுள்ளனர். அமைதிப்படைப் பணியாளர்களையும் நிர்வாக உத்தியோகத்தர்களையும் வெளிநாட்டுத் தூதுவர்கள் கொழும்புக்கு திரும்ப அழைத்துக்கொண்டு விட்டனர். ***யாழ்ப்பாணம் ஒரு முற்றுகையிடப்பட்ட நகரம்போல் காட்சியளிக்கிறது.*** யாழ்ப்பாணத்துக்கு நாம் சென்றால் சந்திகளில் ஒரு இராணுவ டிரக் எரிந்துகொண்டு இருக்கும். மறுபுறத்தில் வெடிகுண்டு துகள்களால் துளைக்கப்பட்ட பெரும் கட்டிடங்கள், கடைகள், சேதமாக்கப்பட்ட தேவாலயம், எரிக்கப்பட்ட நூலகம் இதுதான் நாம் காணும் காட்சியாக அமையும். மாலைப் பொழுதாகியதும் இராணுவ வாகனங்கள் நகரத்தினூடே இரைச்சலிட்டு வரும். அப்போது நகரிலுள்ள கடைக் கதவுகள் யாவும் இழுத்து மூடப்படும். மக்கள் மரத்துக்குப் பின்புறமோ, சுவருக்குப் பின்புறமோ ஒளிந்து கொள்கின்றனர். ஒரு தமிழ்ப் பிரமுகர் என் காதுக்குள் கிசுகிசுத்தார் 'இராணுவத்தினர் இவ்வளவு வேகமாகச் செல்வதற்குக் காரணம் அவர்கள் பீதியடைந்துள்ளனர்' என்று.

இப்போது தமிழர் பகுதியில் எவரையும் எந்த நேரத்திலும் கைது செய்ய முடியும். இதனால் தான் இராணுவம் நினைத்தவுடன் தமிழர்களை சுடுகிறது. யாழ்ப்பாண விவசாயி ஒருவர் "எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் நாங்கள் சுட்டுக் கொல்லப்படலாம். எனவே நாங்கள் போராடித்தான் தீரவேண்டும்" எனக் கூறினார். யாழ் புகையிரத நிலையத்தில் இராணுவத்தினர் ஆயுதசகிதமாக இளைஞர்களை "பயங்கரவாதிகள்" எனும் பெயரில் கைது செய்வதற்கு ரோந்து சுற்றி வருகின்றனர். தமிழ் மாணவர்கள் தங்கள் கல்வியை நிம்மதியாக தொடரமுடியாமல் இருக்கின்றனர். உயர் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் செல்வதை தவிர்த்து வருகின்றனர்.

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள், பத்திரிகையாளர்களின் பார்வையிலிருந்து விலகி வடபகுதியில் சூழுறிக் கொண்டிருக்கும கெரில்லாப் போராட்டமானது விரைவில் ஒரு முழு அளவிலான மக்கள் யுத்தமாக மாறவுள்ளது. தமிழ் மக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் மோதல்கள் மீண்டும் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ளது. கோடைகாலம் அவர்களுக்கு மிகவும் சோதனைதரக் கூடியதாக அமைந்துவிட்டது.

யாழ்ப்பாணத்தின் பிரதான துறைமுக நகரங்களில் ஒன்றான வல்வெட்டித்துறை தமிழீழ விடுதலைக்கு பல புரட்சிகர வீரர்களை வழங்கியுள்ளது. விடுதலைப் புலிகளின் தலைவர் பிறந்த இடமும் இதுதான். "வல்வெட்டித்துறை மற்றும் அதை அண்டியுள்ள பல பிரதேசங்கள் யாவும் பாரிய அழிவிற்குள்ளாகியுள்ளது" என வல்வெட்டித்துறை பிரசைகள் குழுத் தலைவர் கூறினார்.

செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள் அதிகாலைப் பொழுதில் ஒரு கிராமத்தில் இருந்து மனிதர்களின் ஓலம் எழுகிறது. முன்னிரவு அக்கிராமத்தில் தூங்கிக்கொண்டிருந்த ஒரு பெண் கடற்படையினரின் பீரங்கிக் குண்டுகளுக்கு இரையாக்கப்பட்டாள். இவ்வாறான குருட்டுத்தனமான தாக்குதலால் எழுந்த அவலக் குரல்கள் தான் நாளாந்தம் கேட்கின்றன என அதை நேரில் கண்ட இளைஞர் ஒருவர் கூறுகிறார்.

செப்டம்பர் 11ம் திகதி பஸ் ஒன்றில் 46 தமிழர்கள் பிரயாணம் செய்தனர். அந்த பஸ் வண்டியை ஆறு பேர் கொண்ட சிங்களக் கொமாண்டோப் படையினர் கடத்திச் சென்றனர். இதில் இருவர் சீருடை அணிந்திருந்தனர். பஸ் வண்டியில் இருந்த தமிழர்கள் 16 பேர் படுகொலை செய்யப்பட்டனர். தப்பிப் பிழைத்தவர்களில் திருமதி 'கே'யும் அவரது பிள்ளைகளும், பேரப் பிள்ளைகளும் அடங்குவர். பஸ் வண்டியில் இருந்த தமிழர்கள் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன் "உன்னே யாராவது சிங்களவர்கள் இருந்தால் வெளியே வரவும்; பின எங்களைப் பார்த்து நீங்கள் எங்கள் இராணுவத்தினரைக் கொல்கிறீர்கள். ஆகவே நாங்கள் உங்களைக் கொல்லப்போகின்றோம்" என்றனர் என திருமதி 'கே' கூறினார்.

மேலும் அவள் கூறியதாவது, தமிழர்கள் ஒருவர்பின் ஒருவராக மரங்களுக்குப்பின் நிறுத்தப்பட்டனர். பிறகு துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் மட்டும் கேட்டது. தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவன் கூறினான். "குண்டு தீர்ந்து விட்டது, இனி நாங்கள் என்ன செய்வது?" பின் அங்கிருந்த பெண்களை இழுத்துச் சென்றனர். பல இளம் பெண்கள் இச்சம்பவத்தால் திக்பிரமை அடைந்தனர். இவர்கள் தமக்கு ஏற்பட்ட நிலையால் வெட்கம் அடைந்து வீட்டுக்கு போகமுடியாது நின்றதை நான் அறிவேன். ஒரு சிங்களக் கமாண்டோ எனது மகளின் கையைப் பிடித்து இழுத்துச் சென்றான். நானும் மகளும் சேர்ந்து போராடி மகளின் கையில் சிறிது காயம் ஏற்பட்டதன்பின் தெய்வாதீனமாக தப்பித்துக் கொண்டோம். நாங்கள் காட்டில் நெடுந்தூரம் நடந்து வந்து எனது பிரதேசத்தை அடைந்தோம். நாம் வரும் வழியில் சிங்களக் கமாண்டோக்களிடம் இருந்து தப்பிவந்த வேறு பலரையும் கண்டோம். ஆனால் நாம் அவர்களுடன் பேசவில்லை.

**இத்தகைய சம்பவங்களைக் கேட்கும் தமிழ் இளைஞர்கள் விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து போராட பெருமளவில் புறப்படுகிறார்கள். தமக்கு ஏற்படும் அழிவுகளுக்கெதிராக பழிக்குப் பழி வாங்கவே இளைஞர்கள் விரும்புகிறார்கள்.** பழைய பாரம்பரையின் மிதவாதப் போக்குக்கு இனி இடமேயில்லை. முழுத்தமிழ்ச் சமூகமும் போராட்டத்தில் குதிக்குமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். சகல தமிழ் மக்களும் சுதந்திரமாக வாழ விரும்புகின்றனர் என்ற குரல் தான் தமிழர் பகுதியெங்கும் ஒலிக்கிறது.

ஆனால் இச்சுதந்திரத்துக்குக் கொடுக்கும் விலைதான் என்ன? என்பதே இன்றுள்ள கேள்வி. போராட்டம் தீவிரமடைந்ததிலிருந்து நூற்றுக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டது காரணமாக இச்சுதந்திர தாகம் தணிந்துவிடுமா? இல்லவே இல்லை என்றான் ஒரு மாணவன். "இந்த விடுதலை யுத்தத்தை எதிர்நோக்க நாம் இராணுவ ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் தயாராக வுள்ளோம். **தனித்து நின்றோ அல்லது பிறரது உதவியுடனோ நாம் ஒரு நாள் ஈழத்தை அடைந்துதான் தீருவோம்**" என்றான் அவன்.

# தமிழ்ப் புலியும்

www.eelamview.com

www.eelamview.com

# விடுதலைப் புலிகளின் போர்ப் பயிற்சி











விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தேச அமைப்பாக மாணவர் அணி யொன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. **'விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்'** என்ற பெயரில் இந்த அமைப்பு இயங்கும். தமிழீழ விடுதலைக்கு தார்மீக ஆதரவு வழங்குதல், ஒடுக்கப்படும் உலக சமூகங்களின் விடிவுக்கு உழைத்தல், ஆகிய இரு இலட்சியங்களின் அடிப்படையில் இந்த மாணவர் அணி செயற்பட்டுவரும்.

'விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின்' அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 16-3-85ம் திகதி சென்னையில் உள்ள எல். எல். ஏ. மண்டபத்தில் செல்வி சுபா தலைமையில் நடைபெற்றது. சென்னை மாநகரத்தின் பல்வேறு கல்லூரிகளிலுமிருந்து அதன் கிளை உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் நூற்றுக்கணக்கில் கலந்துகொண்டனர்.

தமிழீழ விடுதலைக்கு உடனடியாக நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது பற்றி ஆராய்ந்து அதற்கு முதற்கட்டமாக தமிழகமெங்குமுள்ள கல்லூரி மாணவ மாணவிகளை இம்மாணவர் இயக்கத்தின் உறுப்பினர்களாக்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. கூட்டத்தில் ஏகோபித்த முடிவாக இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**1. இலங்கை வாழ் தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்து தேசிய உரிமையை நிலை நாட்டுகின்ற தமிழீழ தேசத்தை அங்கீகரித்தல்.**

**2. தமிழீழ விடுதலைக்காக களத்தில் போராடுகின்ற புரட்சிகர விடுதலை இயக்கங்களை விடுதலை இயக்கமாக அங்கீகரித்து நிபந்தனை அற்ற ஆதரவு வழங்குதல்.**

இவ் இரு தீர்மானங்களையும் தமிழக சட்டசபை உறுப்பினர்கள், அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், ஆகியனவற்றிற்கு அனுப்பி இதே தீர்மானத்தை தமிழக சட்டசபையும் அங்கீகரிக்கச் செய்து இறுதியில் இந்திய அரசையும் அங்கீகரிக்க வைக்கவேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

இத்தீர்மானங்கள் சகல கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. இக்கோரிக்கையை வென்றெடுக்க பரந்துபட்ட மாணவர் அணி ஒன்றை திரட்டவும் முடிவு செய்யப்பட்டது.







www.eelamview.com

www.eelamview.com

# ஒரு விடுதலை வேங்கையின் வீரமரணம்



தமிழீழ விடுதலைப் புலிகளின் கெரில்லா வீரர்களுக்கும் சிங்கள இராணுவத்தினருக்கும் மத்தியில் அண்மையில் நடைபெற்ற சமர் ஒன்றில் புலி இயக்கத்தின் முக்கிய தளபதிகளில் ஒருவரான கப்டன் ப. இரவீந்திரன் (பண்டிதர்) வீரமரணம் அடைந்தார். இந்நிகழ்ச்சி ஜனவரி 9ம் திகதி யன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அச்சுவேலி எனும் கிராமத்தில் நடைபெற்றது.

அச்சுவேலியிலுள்ள எமது கெரில்லாத் தளமொன்றை பெருந் தொகையான சிங்கள இராணுவப் படையினர் திடீரென முற்றுகையிட்டனர். இதனைத் தொடர்ந்து அத்தளத்திலிருந்த எமது விடுதலை வீரர்களுக்கும் இராணுவத்தினருக்கும் மத்தியில் பயங்கரச் சண்டை மூண்டது. நீண்ட நேரமாக நடைபெற்ற இச்சண்டையில் கப்டன் ரவீந்திரன் இறுதிவரை போராடி விடுதலை இலட்சியத்திற்காக தனது உயிரைத் தியாகம் செய்தார். கப்டன் ரவீந்திரனுடன் நான்கு இளம்புலிகள் வீரமரணம் அடைந்தனர். ஏனைய போராளிகள் முற்றுகையை உடைத்துக் கொண்டு தப்பினர்.

கப்டன் ரவீந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினராவார். அத்துடன் புலி இயக்கத்தின் நிதியமைப்பிற்கும் ஆயுதப் பராமரிப்பிற்கும் பொறுப்பாக இருந்தார். வல்வெட்டித் துறைக்கு அருகேயுள்ள கம்பர் மலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவருக்கு வயது 24. 1977ம் ஆண்டு புலிகள் இயக்கத்தில் சேர்ந்து இயக்க வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். கடமையுணர்வு, கடும் உழைப்பு, இலட்சியப் பற்று ஆகிய சீரிய பண்புகள் நிறைந்த கப்டன் ரவீந்திரன் விடுதலைப் போராளிகளின் அன்புக்கும் மதிப்பிற்கும் பாத்திரமாக விளங்கினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு மிகவும் வேண்டியவராக, அவரது வலது கையாகத் திகழ்ந்தார். இயக்க நிர்வாகப் பொறுப்புக்களைச் சுமந்து வந்ததோடு மட்டுமல்லாது கெரில்லாத் தாக்குதல் நடவடிக்கைகளிலும் இவர் பங்கு பற்றி வந்தார். ஈழத் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காக தனது உயிரை அர்ப்பணித்துக் கொண்ட இந்த வீர மறவனுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைச் செலுத்துகின்றனர்.


அச்சுவேலித் தாக்குதல் சம்பந்தமாக சிங்கள அரசு விசமத்தனமான பொய்ப் பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. புலி இயக்கத்தின் இராணுவத் தலைமையகத்தை அழித்துவிட்டதாகவும், புலி இயக்கத்தையே ஒழித்துவிட்டதாகவும் வெற்றி முரசு கொட்டிவருகிறது. இந்தப் பிரசாரத்தில் எவ்வித உண்மையுமில்லை. இதை நாம் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறோம். புலி இயக்கத்தின் இராணுவ அமைப்பில் பெரிதும் சிறிதுமாக ஏராளமான கெரில்லாத் தளங்கள் தமிழீழத்தில் உள்ளன.

அச்சுவேலியிலுள்ள சிறிய கெரில்லாத் தளமொன்றே இம்முற்றுகைக்கு இலக்காகியது. அதுவும் 500க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கனரக ஆயுதங்களுடன் எமது 15 கெரில்லா வீரர்களைத் திடீரென எதிர்பாராமல் சூழ்ந்து கொண்டனர். இந்தச் சண்டையில் 10 புலிக் கெரில்லா வீரர்கள் வீரமுடன் போராடி முற்றுகை அரணை உடைத்துக் கொண்டு மீண்டது பெரிய போர்ச் சாதனை என்றே சொல்ல வேண்டும். கெரில்லா வீரர்களைக் கைநழுவ விட்ட இராணுவத்தினர் அச்சுவேலிக் கிராமத்திலுள்ள 50 அப்பாவி இளைஞர்களைக் கைதுசெய்து அவர்களுக்கு பயங்கரவாதிகள் என்ற முத்திரைகுத்தி "வெற்றி வாகை" சூடிக்கொண்டனர். ஸ்ரீலங்கா அரசின் இந்தப் பொய்ப் பிரச்சாரமானது தமிழ் மக்களின் மனவுறுதியைத் தளர வைத்து சிங்கள ஆயுதப் படைக்கு ஊக்கத்தை அளிக்கும் நாசகார நோக்கத்தைக் கொண்டது. வெறும் பொய்ப் பிரச்சாரத்தின் மூலம் தமிழரின் சுதந்திரப் போராட்டத்தை நசுக்கிவிட முடியாது. என்பதை சிங்கள அரசுக்கு நாம் உணர்த்தப் போகும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

## விடுதலைப் புலிகள் காலண்டர்

30"×20". 6 Pages. Art Paper. Multicolour Rs. 5








### தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீடுகள்

| | | விலைப் பட்டியல் |
|---|---|---|
| 1. | அரச பயங்கரவாதமும் ஆயுதப் புரட்சியும் | ... ரூ. 2-00 |
| 2. | பெண்களும் புரட்சியும் | ... 3-00 |
| 3. | சோசலிசத் தத்துவமும், கெரில்லா யுத்தமும் | ... 5-00 |
| 4. | விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாறு | ... 6-00 |
| 5. | தமிழீழம் என் தாகம் | ... 1-00 |
| 6. | LIBERATION TIGERS AND TAMIL EELAM FREEDOM STRUGGLE | ... 5-00 |
| 7. | TOWARDS LIBERATION | ... 10-00 |
| 8. | DIARY OF COMBAT | ... 10-00 |

இவ்வெளியீடுகளை பெற விரும்புவோர் கீழ்க் காணும் முகவரிக்கு காசோலையாக அல்லது போஸ்டல் ஆர்டராக பணத்தை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

அ. இராஜாராம்
த. பெ. எண் 928,
அடையாறு,
சென்னை-600 020.




## விடுதலைப்புலிகள்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகார பூர்வமான மாத இதழ்.

சந்தா விவரம்

ஒரு வருட சந்தா ரூபா. 25.00
(தபால் செலவு உட்பட)

விடுதலைப் புலிகள் பத்திரிகைக்கு சந்தாப் பணம் அனுப்ப விரும்புவோரும் அன்பளிப்பு செய்ய விரும்புவோரும் A. இராஜாராம் என்ற பெயருக்கு காசோலை அல்லது போஸ்டல் ஓடர் மூலம் அனுப்பலாம். பணம் அனுப்பும் அன்பர்கள் தமது பெயர், விலாசத்தைத் தெளிவாக எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விடுதலைப் புலிகள் பத்திரிகையுடன் தொடர்பு கொள்ளும் விலாசம்:

A. இராஜாராம்
த. பெ. எண்: 928
அடையாறு
சென்னை-600020

www.eelamview.com